# அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கை

**பாடம் 5**

சபை

Manuscript

thirdmill

Biblical Education. For the World. For Free.

© 2021 by Third Millennium Ministries

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன. இந்த வெளியீட்டின் எந்த பகுதியும் Third Millennium Ministries,Inc. 316 Live Oaks Blvd., Casselberry, Florida 32707. இன் வெளியீட்டாளரினுடைய எழுத்துப்பூர்வ அனுமதியின்றி எந்தவொரு வடிவத்திலும் அல்லது லாபத்திற்கான எந்த வகையிலும் மீண்டும் உருவாக்கப்படக் கூடாது. மதிப்பாய்வுக்கோ, கருத்து தெரிவிக்கவோ அல்லது ஆழ்ந்த அறிவுத்திறன் சம்பந்தப்பட்ட நோக்கங்களுக்காகவோ சுருக்கமான மேற்கோள்களாக எடுக்கப்படலாம்.

சுட்டிக்காட்டப்படாவிட்டால் எல்லா வேத மேற்கோள்களும் பரிசுத்த வேதாகமத்திலிருந்து வந்தவை, The Bible Society of India Version Tamil-O.V. (New Orhto), copyright © 2018 . அனுமதியுடன் பயன்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன.

## THIRDMILL ஊழியத்தைப் பற்றி

1997 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்த Thirdmill ஒரு இலாப நோக்கம் இல்லாத சுவிசேஷ மார்க்க கிறிஸ்தவ ஊழியமாகும்.

**வேதாகம கல்வி. உலகத்திற்காக. இலவசமாக.**

ஊழியத்திற்கு போதுமான பயிற்சி இல்லாத உலகெங்கிலும் உள்ள நூறாயிரக்கணக்கான போதகர்கள் மற்றும் கிறிஸ்தவ தலைவர்களுக்கு இலவச கிறிஸ்தவ கல்வியை வழங்குவதே எங்கள் குறிக்கோளாகும். ஆங்கிலம், அரபு, மாண்டரின், ரஷ்ய மற்றும் ஸ்பெயின் நாட்டு மொழிகளில் இணையற்ற பல்லூடகவியல் பாடசாலை பாடத்திட்டத்தை உருவாக்கி உலகளவில் விநியோகிப்பதன் மூலம் இந்த இலக்கை அடைகிறோம். எங்கள் பாடத்திட்டம் எங்கள் கூட்டு ஊழியங்கள் மூலம் பன்னிரண்டிற்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்படுகிறது. இந்த பாடத்திட்டத்தில் வரைகலை மூலம் இயக்கப்படும் காணொளி காட்சிகள், அச்சிடப்பட்ட கல்வி உபகரணங்கள் மற்றும் இணைய வழி கல்வி உபகரணங்கள் உள்ளன. இது இணைய வழியாகவும் நேரடியான கல்வி நிலையங்கள் மூலமாகவும் கற்றுக்கொடுப்பதற்கு பள்ளிகள், குழுக்கள் மற்றும் தனிநபர்களால் பயன்படுத்தப்படும் பொருட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

பல ஆண்டுகளாக, மிகச்சிறந்த உள்ளடக்கம் மற்றும் தரத்திற்கான விருது பெற்ற பல்லூடகவியல் பாடங்களை உருவாக்கும் அதிக செலவு குறைந்த முறையை நாங்கள் உருவாக்கியுள்ளோம். எங்கள் எழுத்தாளர்கள் மற்றும் தொகுப்பாளர்கள் இறையியல் ரீதியாக பயிற்சி பெற்ற கல்வியாளர்கள் ஆவர், எங்கள் மொழிப் பெயர்ப்பாளர்கள் அவர்களின் சொந்த மொழிகளில் இறையியல் புலமை பெற்றவர்கள், மற்றும் எங்கள் பாடங்களில் உலகெங்கிலும் உள்ள நூற்றுக்கணக்கான மரியாதைக்குரிய பாடசாலை பேராசிரியர்கள் மற்றும் போதகர்களின் நுண்ணறிவு உள்ளது. இதனோடு கூட,

எங்கள் வரைகலை  வடிவமைப்பாளர்கள், விளக்குபவர்கள் மற்றும் தயாரிப்பாளர்கள் அதிநவீன உபகரணங்கள் மற்றும் நுட்பங்களைப் பயன்படுத்தி மிக உயர்ந்த உற்பத்தித் தரங்களை வழங்குகின்றனர்.

எங்கள் விநியோக இலக்குகளை நிறைவேற்றுவதற்காக, Thirdmill ஊழியமானது சபைகள், பாடசாலைகள், வேதாகம பள்ளிகள், மிஷனரி ஊழியர்கள், கிறிஸ்தவ ஒளிபரப்பாளர்கள் மற்றும் செயற்கைக்கோள் தொலைக்காட்சி வழங்குநர்கள் மற்றும் பிற அமைப்புகளுடன் திறம் சார்ந்த கூட்டாண்மைகளை உருவாக்கியுள்ளது. இந்த உறவுகள் ஏற்கனவே தனியாக ஊழியம் செய்கிற தலைவர்கள், போதகர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு எண்ணற்ற காணொளி பாடங்களை விநியோகித்துள்ளன. எங்கள் வலைத்தளங்கள் விநியோகத்திற்கான வழிகளாக உள்ளன. மேலும் உங்கள் சொந்த கற்றல் சமூகத்தை எவ்வாறு தொடங்குவது என்பதற்கான பாட உபகரணங்களையும்  எங்கள் பாடங்களுக்கு கூடுதல் உபகரணங்களையும் வழங்குகின்றன.

Thirdmill ஊழியம் IRS என்கிற அமைப்பினால்  501(c)(3)  கழகமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சபைகள், நிறுவனங்கள், வணிகங்கள் மற்றும் தனிநபர்களின் தாராளமான, வரி விலக்கு பெற்ற  பங்களிப்புகளை நாங்கள் சார்ந்து இருக்கிறோம். எங்கள் ஊழியத்தைப் பற்றிய கூடுதல் தகவலைப் பெறுவதற்கும் நீங்கள் எவ்வாறு ஈடுபடலாம் என்பதை அறிவதற்கும் தயவுசெய்து  www.thirdmill.org. யைப்  பார்வையிடவும்.

# பொருளடக்கம்


முன்னுரை ..... 1

அமைப்பு ..... 2

**பழைய ஏற்பாடு** ..... 4

**இயேசு** ..... 7

**தாக்கங்கள்** ..... 10

நோக்கம் ..... 10

விசுவாசிகள் மற்றும் அவிசுவாசிகள் ..... 11

கடமைகள் ..... 13

பரிசுத்தமானது ..... 16

**வரையறை** ..... 17

**மக்கள்** ..... 20

காணக்கூடிய சபை ..... 22

காண முடியாத சபை ..... 24

கத்தோலிக்க சபை ..... 26

**வரையறை** ..... 27

**காணக்கூடிய உலகளாவிய சபை** ..... 29

**காண முடியாத உலகளாவிய சபை** ..... 33

ஒரே இரட்சகர் ..... 34

ஒரு மதம் ..... 35

ஐக்கியம் ..... 38

**காணக்கூடிய சபை** ..... 39

கிருபையின் உபாயங்கள் ..... 40

ஆவிக்குரிய வரங்கள் ..... 42

சரீரப்பிரகாரமான சம்பத்துக்கள் ..... 43

**காண முடியாத சபை** ..... 45

கிறிஸ்துவுடன் ஐக்கியம் ..... 45

விசுவாசிகளுடன் ஐக்கியம் ..... 48

முடிவுரை ..... 50





வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# முன்னுரை

நவீன உலகத்தில், பெரும்பாலானவர்கள் “சபை” என்னும் வார்த்தையைக் கேட்கும்போது, அது கிறிஸ்தவர்கள் கூடி ஆராதிக்கும் ஒரு கட்டிடம் என்றே நினைக்கிறார்கள். சில இடங்களில், இக்கட்டிடங்கள் அழகான கலை அம்சங்களால் அலங்கரிக்கப்பட்ட மிகப்பெரிய தேவாலயங்களாக இருக்கின்றன. மற்றும் சில இடங்களில், அவை எளிமையான சிற்றாலயங்களாக இருக்கின்றன. வேறு சில இடங்களில் ஒரு கிடங்கு அல்லது கடையின் முகப்பை மாற்றி சபைக் கட்டிடமாகப் பயன்படுத்துகிறார்கள். சில சமயம் ஆராதிப்பவர்கள் ஆபத்திற்கு மறைந்து கொள்ளும் விதத்தில், வீடுகளிலோ, சிற்றிடங்களிலோ, மண் குடிசைகளிலோ அல்லது குகைகளிலோ கூட கூடி ஆராதிக்கிறார்கள். ஆனால் *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையில்* “சபை” என்கிற வார்த்தை, பரிசுத்த வேதாகமத்தில் காணப்படுகிறபடியே பிரதானமாக பிதா, குமாரன், பரிசுத்த ஆவியை விசுவாசித்து அறிக்கையிடும் பரிசுத்த தேவ ஜனத்தின் சமுதாயத்தையே குறிக்கிறது.

*அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கை* பற்றிய நம் தொடரின் ஐந்தாவது பாடம் இது. இதற்கு ”சபை” என்று தலைப்பு வைத்துள்ளோம். இப்புனிதமான நிறுவனத்தைக் குறித்து விசுவாசத்தை அறிக்கையிடுகிறதான *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையிலுள்ள* வாக்கியங்களைப் பார்ப்போம்.

*அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையானது* சபையைப் பற்றி கீழ்க்கண்ட வார்த்தைகளில் வெளிப்படையாகப் பேசுகிறது:

> பின்வருபவைகளை நான் விசுவாசிக்கிறேன் …
> பரிசுத்த கத்தோலிக்க சபை மற்றும்
> பரிசுத்தவான்களுடைய ஐக்கியம்.

விசுவாச அறிக்கையிலுள்ள மேற்கண்ட வரிகளை பரிசுத்த ஆவி மற்றும் அவரது ஊழியங்களுக்கென்று அர்ப்பணிக்கப்பட்ட ஒரு பெரும் பிரிவில் பார்த்தோம். ஏனென்றால், திரித்துவத்தில் ஆவியானவரே அனுதினமும் சபையுடன் நேரடியாக ஈடுபட்டிருக்கும் நபர் ஆவார். பரிசுத்த ஆவியானவரைப் பற்றிய பாடத்திலேயே நாம் சபையைப் பற்றியும் விவாதித்திருக்கலாம். ஆனால், சபையானது கிறிஸ்தவத்திற்கும், கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களாகிய நம் வாழ்வின் அனுபவத்திற்கும் மிகவும் அடிப்படையான ஒன்றாக இருப்பதால், அதற்கென்று ஒரு தனி பாடத்தை ஒதுக்கியுள்ளோம்.

முந்தைய பாடமொன்றில் குறிப்பிட்டது போல், சபையின் மீது வைக்கப்படும் விசுவாசம் தேவனிடம் வைக்கும் விசுவாசத்தைப் போன்றே உள்ளதால், புராட்டஸ்டன்ட் சபையினர் பலர் சபையின் மீதான விசுவாசத்தை அறிக்கையிடுவதை விநோதமாகக் கருதுகிறார்கள். சபையை விசுவாசிக்கிறோம் என்று பிரமாணம் கூறுகிறபோது, நம் இரட்சிப்பிற்காக சபையின் மீது நம்பிக்கை வைக்கிறோம் என்று அர்த்தமல்ல. இரட்சிப்புக்கு ஏதுவான விசுவாசம் என்பது கிறிஸ்துவில் மட்டுமே வைக்க வேண்டிய ஒன்று. ஆகவே, சபையை விசுவாசிக்கிறோம் என்பது சபையைப் பற்றிப் போதித்து, கிறிஸ்தவர்களுக்கு சபையின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கும் வேதாகமத்தை விசுவாசிப்பதாகும். பரிசுத்தவான்களுடைய ஐக்கியத்தை விசுவாசிப்பதும் இதே போன்றது. நம் இரட்சிப்பிற்காக பிற விசுவாசிகளை நாம் நம்புகிறதில்லை. ஆனால், தேவன் மற்ற விசுவாசிகளை நமக்கு சுவிசேஷம் அறிவிக்கவும், ஊழியம் செய்யவும், நம் விசுவாசத்தைப் பலப்படுத்தவும் பயன்படுத்துகிறார் என்ற வேத போதனையை நாம் நம்புகிறோம்.

சபையைப் பற்றிய இந்தப் பாடம் விசுவாச அறிக்கையைப் பிரதிபலிக்கக்கூடிய நான்கு முக்கிய போதனைகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. முதலாவது, நாம் சபையின் தெய்வீக அமைப்பைப் பற்றி பார்ப்போம். இரண்டாவதாக, சபை பரிசுத்தமானது என்கிற உண்மையை விவாதிப்போம். மூன்றாவது, சபை உலகளாவியதா என்பது பற்றிப் பேசுவோம். நான்காவதாக, சபை என்பது ஐக்கியத்தைக் குறிக்கிறது என்ற கருத்தை ஆராய்வோம். ஒவ்வொரு பிரிவும் அப்போஸ்தல விசுவாசப் பிரமாணத்தில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள சபையின் இயல்பையும், அடையாளத்தையும் புரிந்து கொள்ள நமக்கு உதவி செய்யும். நாம் சபையின் தெய்வீக அமைப்பைப் பார்ப்பதிலிருந்து ஆரம்பிக்கலாம்.

# அமைப்பு

இந்த நவநாகரீக உலகில் சபை அவசியமற்றது எனக் கருதும் அநேக கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள் – அல்லது சபை தேவையில்லை என்பது போலப் பாவனையாவது செய்கிறார்கள். உண்மையான விசுவாசிகள் கூட சபை போன்ற அமைப்புகள் தேவனோடுள்ள நம் தனிப்பட்ட உறவில் ஊடுருவும் மனித கண்டுபிடிப்புகள் என்று நினைக்கிறார்கள். ஆனால் வேதம் முற்றிலும் வித்தியாசமான கண்ணோட்டத்தில் இதைப் போதிக்கிறது. மிகப் பரந்த அர்த்தத்தில் சபை என்பது, இந்த உலகத்தில் உள்ள தேவனுடைய ராஜ்யம், அவருடைய விசேஷித்த ஜனங்களின் கூடுகை, மற்றும் அவருக்கு



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

உண்மையாயிருப்பவர்களுக்கு அவர் கிருபையை வழங்கும் ஒரு முக்கியமான வழி ஆகும். வேத வசனத்தின்படி சபை என்பது தேவனோடு உறவை ஏற்படுத்தவும், அதைப் பராமரிப்பதற்கும் மிகவும் இன்றியமையாததாக இருக்கிறது.

சபை தேவனால் அமைக்கப்பட்டது என்று கூறும்போது, தேவன் அதை ஒரு நோக்கத்திற்காக உருவாக்கி, அதற்கு அதிகாரம் அளித்தார் என்று அர்த்தமாகிறது. பொதுவாக, சபையை தேவன் அங்கீகரிக்கிறார் என்று வேதம் கற்பிக்கிறது. உலகத்தில் தமது பணியை நிறைவேற்ற அவர் நியமித்த அமைப்பு இது. இயேசு மத்தேயு 16:18 இல் கூறியது போல்:

> இந்தக் கல்லின்மேல் என் சபையைக்கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை. (மத்தேயு 16:18).

சபையானது விழுந்து போன மனிதர்களின் கண்டுபிடிப்பல்ல. இயேசுவே சபையின் ஸ்தாபகர் ஆவார்.

எனவே, சரித்திரம் முழுவதும் சபையில் குறைபாடுகள் இருப்பதை நாம் கண்டாலும், சில சமயங்களில் அவை இனி தேவனின் சபை அல்ல என்று கூறுமளவுக்கு சபைகள் சுவிசேஷத்திலிருந்து மிகவும் வழி விலகிச் சென்றிருந்தாலும், சபை பயனற்றது அல்லது தேவையற்றது என்று நாம் முடிவு செய்யக்கூடாது. அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையானது சபைக்கான இந்த தெய்வீக ஒப்புதலை கீழ்க்கண்ட எளிய வார்த்தைகளால் உறுதிப்படுத்துகிறது:

> நான் … சபையை … விசுவாசிக்கிறேன்.

*அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கை* என்பது ஆதி சபைகளின் விசுவாச விதிமுறைகளின் சுருக்கம் என முந்தின பாடங்களில் படித்தது நினைவிருக்கலாம். அந்த விசுவாச விதிமுறைகள் வேதவசனங்களின் தொகுப்பாக இருந்தன. எனவே, விசுவாசப் பிரமாணமானது சபையின் மீதான நம்பிக்கையை அறிக்கையிடும்போது, சபையைப் பற்றி வேதாகமம் போதிப்பதை உறுதிப்படுத்த முற்படுகிறது. தேவன் இவ்வுலகில் தமது நோக்கங்களை நிறைவேற்ற சபையை ஸ்தாபித்தார் என்பதே சபையைக் குறித்த வேதாகமப் போதனையின் மிக அடிப்படையான அம்சமாகும்.

சபையின் தெய்வீக அமைப்பைக் கருத்தில் கொள்ளும்போது, நாம் மூன்று முக்கிய காரியங்களில் கவனம் செலுத்துவோம். முதலில், சபையின் பழைய ஏற்பாட்டுப் பின்னணியைப் பார்ப்போம். இரண்டாவதாக, இயேசு இவ்வுலக ஊழியத்தின்போது சபையை ஸ்தாபிக்க என்ன செய்தார் என்பதில் நாம் கவனம் செலுத்துவோம். மூன்றாவதாக, இந்த வேதாகமக் கண்ணோட்டங்களின் சில தாக்கங்களை நாம் ஆய்வு செய்வோம். சபையின் பழைய ஏற்பாட்டுப் பின்னணியில் இருந்து ஆரம்பிப்போம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

## பழைய ஏற்பாடு

புதிய ஏற்பாட்டில் உள்ள சபை என்னும் கருத்து உண்மையில் பழைய ஏற்பாட்டை அடித்தளமாகக் கொண்டது.

> இயேசு பரலோகத்திற்குச் சென்று, பெந்தெகொஸ்தே நாளில் தமது ஆவியை சீஷர்கள் மீது ஊற்றின நாளில்தான் சபை ஸ்தாபிக்கப்பட்டது என்று பலர் நினைக்கலாம். ஆனால், இது சபையின் இயல்பைப் பற்றிய தவறான புரிதல் என நான் எண்ணுகிறேன். சபையானது பழைய ஏற்பாட்டு தேவ ஜனங்களின் தொடர்ச்சி என்றே சொல்லலாம். தேவன் ஆபிரகாமையும் பழைய ஏற்பாட்டு ஜனங்களையும் அழைத்தார். இதுவே சபை என்றும், சபையின் தொடக்கம் என்றும் நாம் சொல்ல முடியும். எனவே அங்கு தொடங்கிய சபை, நம் காலத்தில் தொடர்ந்து, இயேசு பரலோகத்திலிருந்து திரும்பும் நாளில் முழுமை அடையும்.
>
> Dr. ரியாட் காசிஸ்

புதிய ஏற்பாடு *எக்ளசியா* என்ற கிரேக்க வார்த்தையை சபையைக் குறித்து பேசுவதற்கு பல முறை உபயோகிக்கிறது. ஆனால் இந்த பதம் பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிப்பெயர்ப்பான செப்டுவஜின்டில் இருந்து வருகிறது. பழைய ஏற்பாட்டில், *எக்ளசியா* மற்றும் அதற்கு இணையான எபிரெய வார்த்தை ஒன்றாக சேர்ந்த இஸ்ரவேல் தேசத்தை அடையாளப்படுத்த அடிக்கடி பயன்படுத்தப்படுகிறது. உபாகமம் 9:10, 31:30; நியாயாதிபதிகள் 20:2; 1 இராஜாக்கள் 8:14; சங்கீதம் 22:22, 25 ஆகிய வேத பகுதிகளிலும் மற்றும் வேறு பல இடங்களிலும் நாம் இதை காண்கிறோம்.

புதிய ஏற்பாட்டில் கூட, *எக்ளசியா* சபையைக் குறிக்கும் தொழில்நுட்ப வார்த்தையாக மாறியுள்ளது, இந்த வார்த்தை பழைய ஏற்பாட்டு இஸ்ரவேலின் கூடுகையைக் குறிக்க இன்னும் பயன்படுத்தப்படுகிறது. உதாரணமாக, அப்போஸ்தலர் 7:38 இல், ஸ்தேவான் தன்னை கொல்லுகிறவர்களிடம் பேசிய உரையில் இந்த வார்த்தைகளை வாசிக்கிறோம்:

> சீனாய்மலையில் தன்னுடனே பேசின தூதனோடும் நம்முடைய பிதாக்களோடுங்கூட வனாந்தரத்திலே சபைக்குள்ளிருந்தவனும், நமக்குக் கொடுக்கும்படி ஜீவவாக்கியங்களைப் பெற்றவனும் இவனே [மோசே] (அப்போஸ்தலருடைய நடபடிகள் 7:38).

இங்கே, சபை என மொழிப்பெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தை எக்ளசியா ஆகும், இது பொதுவாக ”சபை” என்று மொழிப்பெயர்க்கப்படுகிறது. பழைய ஏற்பாட்டில் இருந்த இந்த இஸ்ரவேலின் சபை புதிய ஏற்பாட்டு சபைக்கு சமமானதாகவும் முன்னோடியானதாகவும் இருந்தது என்பதை இது குறிக்கிறது.

மேலும் 1 பேதுரு 2:9 இல், பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேலுக்குப் பொருந்தும் பெயர்களால் பேதுரு சபையையும் அழைத்தார். அங்கே அவர் என்ன சொல்லியிருக்கிறார் என்று கவனிக்கவும்:

> நீங்களோ தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள் (1 பேதுரு 2:9).

இங்கே, பேதுரு இஸ்ரவேல் தேசத்தைப் பற்றிப் பேசிய பல பழைய ஏற்பாட்டுப் பகுதிகளிலிருந்து மேற்கோள் காட்டினார். அவர் புதிய ஏற்பாட்டு சபைக்கு இஸ்ரவேலின் விசேஷித்த பெயர்களைப் பயன்படுத்தினார். இந்த வழியில், இந்த இரண்டு குழுக்களுக்கிடையில் முக்கியமான தொடர்ச்சிகள் இருப்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

> 1 பேதுரு 2 போன்ற ஒரு வேத பகுதியைப் பற்றி நாம் நினைத்தால், பேதுரு முதலில் பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேலுக்கு வழங்கப்பட்ட “ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்” போன்ற தலைப்புகளை இப்போது சபைக்குப் பயன்படுத்துகிறார். பேதுரு பல்வேறு பிராந்தியங்களில் உள்ள புறஜாதி சபைகளின் குழுவிற்கு போதிப்பதைக் காண்கிறோம், முக்கியமாக இஸ்ரவேலுக்கு தேவன் கொடுத்த வாக்குத்தத்தங்கள் தங்களில் நிறைவேறுவதைப் பார்க்கவும், அது அவர்களின் அடையாளம் என்பதை அங்கீகரிக்கவும் வேண்டுமென அவர் போதித்தார்.
>
> Dr. டென்னிஸ் இ. ஜான்சன்

நிச்சயமாக, புதிய ஏற்பாட்டு சபை இஸ்ரவேலின் பழைய ஏற்பாட்டு கூடுகைகளைப் போன்றது என்று சொல்ல முடியாது. அவை இணைக்கப்பட்டுள்ளன, ஆனால் அவை இரண்டும் வேறுபட்டவை. ரோமர் 11 இல், இஸ்ரவேலின் பழைய ஏற்பாட்டுக் கூடுகைக்கும் கிறிஸ்தவ சபைக்கும் இடையிலான உறவைப் பற்றிப் பேச பவுல் இரண்டு உருவகங்களைப்

பயன்படுத்தினார். அவர் அவற்றை மாவுடனும் மற்றும் ஒரு ஒலிவ மரத்துடனும் ஒப்பிட்டுப் பேசினார்.

ரோமர் 11:16 இல் பவுல் எழுதியதைக் கவனியுங்கள்:

> மேலும் முதற்பலனாகிய மாவானது பரிசுத்தமாயிருந்தால், பிசைந்தமா முழுவதும் பரிசுத்தமாயிருக்கும்; வேரானது பரிசுத்தமாயிருந்தால், கிளைகளும் பரிசுத்தமாயிருக்கும் (ரோமர் 11:16).

முதலில், பழைய ஏற்பாட்டு கூடுகை புதிய ஏற்பாட்டு சபை செய்யப்பட்ட மாவின் முதற்பலன் என்று பவுல் கூறினார்.

இஸ்ரவேல் தேவனுக்கு அப்பத்தை முதல் பலியாகக் கொடுக்க வேண்டும் என்று லேவியராகமம் 23:17 கூறியது. முதல் பலன்கள் ஒரு தனி அறுவடை அல்ல. அவைகள் முழு அறுவடையின் ஒரு பகுதியாகவும், முழு அறுவடையின் அடையாளமாகவும் இருந்தன. எனவே, இஸ்ரவேலும் புதிய ஏற்பாட்டு சபையும் ஒரே தொகுதி மாவில் இருந்து வந்தவை என்று பவுல் சொன்னபோது, இஸ்ரவேலும் புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவர்களும் ஒரே அமைப்பைச் சேர்ந்தவர்களும், ஒரே தேவனின் ஜனங்களும், ஒரே சபையைச் சேர்ந்தவர்களுமாயுமிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்.

இரண்டாவதாக, பழைய ஏற்பாட்டு கூடுகை ஒரு மரத்தின் வேர் என்றும், புதிய ஏற்பாட்டு சபை அதே மரத்தின் கிளைகள் என்றும் பவுல் கூறினார். பவுல் உண்மையில் இந்த உதாரணத்தை விளக்க பல வசனங்களை எடுத்துக்கொண்டார். எல்லா காலங்களிலும் இருக்கிற சபையை ஒரு ஒலிவ மரத்துடன் ஒப்பிட்டார். யூதர்களை அதிகமாகக் கொண்ட பழைய ஏற்பாட்டு கூடுகை, மரத்தின் பெரும்பகுதியாகும்: அதாவது வேர்கள், தண்டு மற்றும் பல கிளைகள் இதில் அடங்கும். மேலும் புறஜாதி கிறிஸ்தவர்கள் மரத்தில் ஒட்டப்பட்டிருந்த காட்டு ஒலிவ மரக்கிளைகள் ஆவார்கள். எளிமையாகச் சொன்னால், யூத சபையில் புறஜாதி கிறிஸ்தவர்கள் ஒட்டப்பட்டனர். எனவே, பவுலின் காலத்தில் சபையில் யூதர்கள் மற்றும் புறஜாதிகள் இருவரும் இருந்தாலும், அதன் தண்டு மற்றும் வேர்கள் பழைய ஏற்பாட்டு காலம் முழுவதுமாக நீண்டிருந்த அதே மரமாகவே இருந்தது. ஆமாம், இந்த புதிய மரம் பல விஷயங்களில் வேறுபட்டது. இது மேம்படுத்தப்பட்டு கட்டமைக்கப்பட்டுள்ளது. ஆனால் இன்னும் அது அதே மரம் தான். அதே வழியில், பழைய ஏற்பாட்டு சபை மேம்படுத்தப்பட்டு புதிய ஏற்பாட்டு சபையில் கட்டமைக்கப்பட்டுள்ளது. அவை முக்கியமான வழிகளில் வேறுபடுகின்றன, மேலும் அவை வளர்ச்சியின் வெவ்வேறு நிலைகளைக் குறிக்கின்றன. ஆனால் அவைகள் ஒரே சபையாகவே இருக்கின்றன.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

பழைய ஏற்பாட்டின் பின்னணியில் இருந்து சபையின் ஒப்புதலை இப்போது நாம் கருத்தில் கொண்டுள்ளோம், பழைய ஏற்பாட்டு சபையை சார்ந்த விதத்தில் இயேசு எவ்வாறு தனது சபையை கட்டினார் என்றும் பழைய ஏற்பாட்டு சபையை எப்படி அவர் முன்னே எடுத்துச் சென்றார் என்றும் பார்ப்போம்.

## இயேசு

இயேசு வந்தபோது, அவருடைய பூமிக்குரிய ஊழியம் உலகம் மற்றும் தேவ ஜனங்கள் மீது வியத்தகு தாக்கத்தை ஏற்படுத்தியது என்பதை மறுக்க முடியாது. இயேசு அதன் பழைய சபை உட்பட பழைய ஒழுங்கை வெறுமனே தொடரவில்லை என்பதை நல்ல காரணத்துடன் பல இறையியலாளர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். அதே சமயத்தில், முற்றிலும் புதியதாக இருந்த ஒரு சபையை இயேசு நிறுவவில்லை என்பதை அங்கீகரிப்பது முக்கியம். அவருடைய சபை பழைய ஏற்பாட்டு சபையுடன் பெரிய தொடர்ச்சியை கொண்டுள்ளது.

சுவிசேஷங்களில் பதிவு செய்யப்பட்ட மூன்று சந்தர்ப்பங்களில் இயேசு சபையை எக்ளசியா என்ற பெயரில் மட்டுமே குறிப்பிட்டார். உண்மையில், எக்ளசியா என்ற வார்த்தை மத்தேயு, மாற்கு, லூக்கா அல்லது யோவான் சுவிசேஷ புத்தகங்களில் இந்த இடங்களில் மட்டுமே இடம்பெற்றுள்ளது. இந்த மூன்று வேத பகுதிகளும் மத்தேயு எழுதின சுவிசேஷத்தில் உள்ளன – ஒன்று 16:18 லும் மற்ற இரண்டும் 18:17 இல் வருகின்றன. இந்த இரண்டு வசனங்களையும் இன்னும் நெருக்கமாகப் பார்ப்போம்.

மத்தேயு 16:18 இல், இயேசு இந்த வார்த்தைகளைப் பேசினார்:

> இந்தக் கல்லின்மேல் என் சபையைக்கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை. (மத்தேயு 16:18).

இங்கே ”கட்டு” என மொழிபெயர்க்கப்பட்டுள்ள ஒய்கோடோமியோ என்ற வார்த்தை, புதிய ஒன்றை கட்டுவதையோ அல்லது ஏற்கனவே இருப்பதை மீண்டும் கட்டியெழுப்புவதையோ அல்லது மீட்டமைப்பதையோ குறிக்கலாம். இயேசு எந்த அர்த்தத்தை இந்த இடத்தில் கொண்டிருந்தார் என்று அவர் வெளிப்படையாகக் கூறவில்லை என்றாலும், ரோமர் 11 இல் பவுலின் போதனையிலிருந்து நாம் ஏற்கனவே பார்த்தது என்னவென்றால், இயேசு பழைய ஏற்பாட்டு சபையை புனரமைத்து மீட்டெடுக்கிறார். இது நம்மை இந்த கருத்தை ஆதரிக்க வைக்கிறது.

மத்தேயு 18:17 இல் உள்ள இயேசுவின் வார்த்தைகள் குறைந்த அளவே தெளிவற்றவையாக இருக்கின்றன. அங்கே அவர் என்ன சொல்லியிருக்கிறார் என்று கவனிக்கவும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> அவர்களுக்கும் அவன் செவிகொடாமற்போனால், அதைச் சபைக்குத் தெரியப்படுத்து; சபைக்கும் செவிகொடாதிருப்பானானால், அவன் உனக்கு அஞ்ஞானியைப்போலவும் ஆயக்காரனைப்போலவும் இருப்பானாக (மத்தேயு 18:17).

இந்த வசனத்தில், இயேசு சபை ஒழுக்கம் பற்றி பேசினார். மனந்திரும்பாத ஒரு நபரை சபை அல்லது கூடுகைக்கு முன் கொண்டு வர வேண்டும் என்பது அவருடைய அறிவுரையாகும். இயேசுவின் ஊழியத்தின் அசல் சூழலில் இருந்த ஒரே சபை, பிராந்தியம் முழுதும் பரவி கிடந்த யூத ஜெப ஆலயங்களும் எருசலேம் தேவாலயமுமே. இவை இஸ்ரவேலின் கூடுகைகளின் தனித்துவமான பழைய ஏற்பாட்டு வடிவங்களாக இருந்தன, இருந்தாலும் இயேசு அவற்றை ”சபை” என்று அழைத்தார்.

பழைய ஏற்பாட்டில் பிரச்சனைகள் ஏற்பட்டபோது பொதுவாக மூப்பர்களாலும் ஆசாரியர்களாலும் மற்றும் நியாதிபதிகளாலுமே கையாளப்பட வேண்டியிருந்தன – அதாவது தீர்ப்பு வழங்கும் பணிக்காக நியமிக்கப்பட்ட சபை பிரதிநிதிகள் இவர்கள் தான். யாத்திராகமம் 18 மற்றும் உபாகமம் 1 மற்றும் 19 போன்ற இடங்களில் இதை நாம் பார்க்கிறோம். இயேசு தனது நாளில் இந்தக் கொள்கையை உறுதிப்படுத்தினார், அதாவது இஸ்ரவேலின் சபைக்குள் தங்கள் சச்சரவுகளைத் தீர்க்க அவர்கள் இன்னும் கடமைப்பட்டிருப்பதை தனது பார்வையாளர்களுக்கு நினைவூட்டினார். ஆனால் இயேசு தனது வார்த்தைகளை மத்தேயு 16 இல் முன்பு குறிப்பிட்ட அவருடைய சொந்த சபைக்கும் பொருந்தும் என்று நினைத்தார். இதனால்தான் மத்தேயு நமக்காக இயேசுவின் வார்த்தைகளை பதிவு செய்தார். இயேசு மற்றும் மத்தேயுவின் மனதில், பவுலின் மனதில் இருந்ததைப் போலவே, புதிய ஏற்பாட்டு சபை இஸ்ரவேலின் பழைய ஏற்பாட்டு கூடுகைகளின் மேம்படுத்தலாகவே இருந்தது என்பதை நீங்கள் பார்க்கிறீர்கள். இயேசு இஸ்ரவேலுக்கு மாற்றாக சபையை கொண்டு வரவில்லை; அவர் புதிய ஏற்பாட்டு சபையின் வடிவத்தில் இஸ்ரவேலை மீட்கவும் காக்கவும் வந்தார்.

பழைய மற்றும் புதிய ஏற்பாட்டு சபைகளுக்கிடையேயான தொடர்ச்சியை நாம் பார்க்கும்போது, இந்த இரண்டு சபைகளையும் ஒன்றாக இணைப்பதில் இயேசு வகிக்கும் முக்கிய பங்கை அங்கீகரிப்பது முக்கியம்.

முதலில், பரந்தளவில், புதிய ஏற்பாடு இயேசுவை இஸ்ரவேலுக்கு தேவன் அளித்த வாக்குத்தத்தங்களின் நிறைவேறுதலாகக் காட்டுகிறது. ரோமர் 8:1-4 மற்றும் கலாத்தியர் 3:16-29 ஆகியவற்றில் நாம் பார்க்கிறபடி, இயேசு தேவனின் உடன்படிக்கையைக் கடைப்பிடித்து, ஆபிரகாம் மற்றும் மோசேக்கு தேவன்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

வாக்குத்தத்தம் செய்த அனைத்து ஆசீர்வாதங்களையும் பெற்ற உண்மையுள்ள இஸ்ரவேலர் ஆவார். லூக்கா 1:32 மற்றும் அப் 2:31-33 ஆகியவற்றில் நாம் கற்றுக்கொள்கிறபடி, அவர் தாவீதின் சிங்காசனத்தை மீட்டெடுத்து இஸ்ரவேல் மற்றும் யூதாவின் மீது ஆட்சி செய்கிற தாவீதின் குமாரன் ஆவார். இயேசு கடந்த காலத்தோடு முறிவை ஏற்படுத்தவில்லை. அவர் பழைய ஏற்பாட்டு சபையின் உச்சம் ஆவார், மேலும் அதன் பூரணமான உறுப்பினரும் ஊழியரும் ஆவார்.

இரண்டாவதாக, இயேசுவே புதிய ஏற்பாட்டு சபையின் நிறுவனர் ஆவார், தோல்வியடைந்த நிலையில் இருந்த பழைய ஏற்பாட்டு சபையை புதிய ஏற்பாட்டு சபையாக மாற்றியமைத்து புதுப்பித்தலை கொண்டுவந்தவர் அவரே. வேதாகமம் அவரை எபேசியர் 5:23 மற்றும் கொலோசெயர் 1:18 ஆகிய வேத பகுதிகளில் சபையின் தலை என்று அழைக்கிறது. அவர் எபேசியர் 5:22-33 மற்றும் வெளிப்படுத்தின விசேஷம் 19:1-10 ஆகிய வேத பகுதிகளில் சபையின் மணவாளன் ஆவார். மேலும் மத்தேயு 28:18-20 இல் உள்ள மகா கட்டளையில் தனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தைப் பெற சபையை நியமிப்பது இயேசுவே. இயேசு சபையை நேசிக்கிறார், அங்கீகரிக்கிறார் மற்றும் அதற்கு அதிகாரம் வழங்குகிறார்.

> இயேசு கிறிஸ்துவுடனான பழைய ஏற்பாட்டு சபையின் உறவு அதன் சாராம்சத்திலும் அதன் மையத்திலும் இயேசு கிறிஸ்துவுடனான புதிய ஏற்பாட்டு சபையின் உறவைப் போலவே உள்ளது. சில கிறிஸ்தவர்களுக்கு, பழைய ஏற்பாட்டு சபை என்ற பதம் விசித்திரமாக இருக்கும். அப்போஸ்தலருடைய நடபடிகள் 2 இல் பெந்தெகொஸ்தே நாளில் சபை பிறந்ததாக நாம் நினைக்கலாம். ஆனால், சபை என்பது அவர் உடன்படிக்கை பண்ணின தேவ ஜனங்கள் என்றும், தேவன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து செய்த கிரியையின் மூலம் மீட்டுக்கொள்ளப்பட்டவர்கள் என்றும் எண்ணினால், பழைய ஏற்பாட்டு சபை என்பது வெறுமனே மேசியா வரும் ஒரு நாளில் தேவன் இரட்சிப்பை நிறைவேற்றுவதை எதிர்நோக்கும் விசுவாசிகளின் ஒரு கூட்டமாகும். அதனால் பழைய ஏற்பாட்டு சபை தேவனுடைய கிருபையையும், சிந்தப்பட்ட தேவனின் இரத்தமாகிய சிலுவையில் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தையும் நம்பியது. பழைய ஏற்பாட்டு கிறிஸ்தவர்களும் பழைய ஏற்பாட்டு விசுவாசிகளும் மற்றும் பழைய ஏற்பாட்டு சபை உறுப்பினர்களும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நிறைவேற்றிய கிரியையை எதிர்நோக்குகிறார்கள். அவர்கள் தங்கள் பாவங்களை மன்னித்து தங்களை தேவனுடன் ஒப்புரவாக்கும் தேவனுடைய சகல வல்லமை பொருந்திய



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> மற்றும் தகுதியற்ற தங்களுக்குக் கிடைத்த கிருபையையும் இரக்கத்தையும் நம்பினர். எனவே, விஷயத்தின் மையம் என்னவென்றால், பழைய ஏற்பாட்டு விசுவாசிக்கும் பழைய ஏற்பாட்டு சபைக்குமான உறவும், தேவனுடனான அவர்களின் உறவும் நாம் தேவனுடன் கொண்டுள்ள உறவைப் போலவும் புதிய ஏற்பாட்டு விசுவாசிகளுக்கும் புதிய ஏற்பாட்டு சபைக்கும் உள்ள உறவைப் போன்றதாகவுமே இருக்கிறது.
>
> Dr. சாமுவேல் லிங்

இதுவரை, சபையின் அமைப்பை அதன் பழைய ஏற்பாட்டு பின்னணி மற்றும் இயேசுவின் பூமிக்குரிய ஊழியத்தின் கண்ணோட்டத்தில் பார்த்தோம். இந்த கட்டத்தில், இந்த விஷயங்களின் சில தாக்கங்களைக் கருத்தில் கொள்ள நாம் தயாராக உள்ளோம்.

## தாக்கங்கள்

பழைய ஏற்பாட்டு இஸ்ரவேலின் மறுசீரமைப்பு மற்றும் வளர்ச்சியாக இயேசு புதிய ஏற்பாட்டு சபையை நியமித்தார் என்பதை நாம் உணரும்போது, பழைய ஏற்பாட்டு இஸ்ரவேலுக்கும் புதிய ஏற்பாட்டில் உள்ள கிறிஸ்தவ சபைக்கும் இடையே ஒரு அடிப்படை தொடர்ச்சி உள்ளது என்பது ஒரு முக்கியமான தாக்கமாகும். நடைமுறையில், புதிய ஏற்பாட்டில் உள்ள தேவ ஜனங்களின் சமூகம் அதன் பழைய ஏற்பாட்டு வேர்களை பிரதிபலிக்க வேண்டும் என்று நாம் எதிர்பார்க்க வேண்டும். நிச்சயமாக, சில விஷயங்கள் வேறுபட்டவை, புதிய ஏற்பாடு இந்த மாற்றங்களைச் சுட்டிக்காட்டுவதில் அக்கறை காட்டுகிறது. ஆனால் சபை இஸ்ரவேலைப் போன்றது என்பதை புதிய ஏற்பாடு போதிக்கிறது.

அவை அனைத்தையும் நாம் குறிப்பிடுவதற்கு தொடர்ச்சிக்கான பல காரியங்கள் உள்ளன. ஆனால் அவைகளில் மூன்றை வெளிப்படையாக பட்டியலிட நேரம் ஒதுக்குவது தகுதியானதாகும். முதலாவதாக, பழைய ஏற்பாட்டு சபைக்கும் புதிய ஏற்பாட்டு சபைக்கும் இடையே நோக்கம் சம்பந்தமான பெரிய தொடர்ச்சி உள்ளது.

### நோக்கம்

இறையியலாளர்கள் பெரும்பாலும் உலக வரலாற்றை சிருஷ்டிப்பு, வீழ்ச்சி மற்றும் மீட்பு என மூன்று நிலைகளாக சுருக்கமாகக் கூறுகிறார்கள். ஆதியாகமம் 1–2 இல் விவரிக்கப்பட்டுள்ள சிருஷ்டிப்பின் கட்டத்தில், தேவன் உலகத்தையும்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

தாவரங்களையும் மிருகங்களையும் மனித குலத்தையும் சிருஷ்டித்தார். உலகின் ஒரு விசேஷித்த பகுதியில், அவர் ஏதேன் தோட்டத்தை உருவாக்கினார். தேவனின் கட்டளையைப் பின்பற்றி, பூமியை நிரப்பி அதை ஆள்வதும் அதை தேவனுடைய பரிசுத்தமான வெளிப்படையான பிரசன்னத்திற்கு ஏற்ற இடமான ஏதேன் தோட்டத்தைப் போல ஆக்குவதும் மனிதகுலத்தின் பொறுப்பாகும்.

ஆதியாகமம் 3 இல் பதிவுசெய்யப்பட்ட வீழ்ச்சியின் கட்டத்தில், மனிதகுலம் தேவனுக்கு எதிராக கலகம் செய்து ஏதேன் தோட்டத்திலிருந்து வெளியேற்றப்பட்டது. மனிதகுலம் பாவத்தில் விழுந்ததில், முழு சிருஷ்டிப்பும் சீர்கெட்டது. ரோமர் 8:20-22 இல் பவுல் இதை விளக்கினார்.

மீதமுள்ள வரலாறு மீட்பின் கட்டத்தை உருவாக்குகிறது, இதில் மனிதகுலத்தை ஒரு பூரணமான நிலைக்கு மீட்டெடுக்கவும் மனிதகுலத்தின் மூலம் சிருஷ்டிப்பை அதன் முதல் நிலைக்கு மீட்டெடுக்கவும் தேவன் செயல்படுகிறார். மீட்பின் காலத்தின் இறுதி நிலை ஏசாயா 65:17 மற்றும் 66:22, 2 பேதுரு 3:13 மற்றும் வெளிப்படுத்தின விசேஷம் 21:1 ஆகியவற்றில் நாம் வாசிக்கும் புதிய வானங்கள் மற்றும் புதிய பூமியாக இருக்கும். மனிதகுலம் மற்றும் சிருஷ்டிப்பின் இந்த மீட்பு எப்போதும் இரண்டு ஏற்பாடுகளிலும் தேவனுடைய சபையின் நோக்கமாக இருந்திருக்கிறது.

நவீன உலகில், சபை சிருஷ்டிப்பை மீட்டெடுக்கும் இந்த இலக்கை நோக்கி இன்னும் பாடுபட்டு வருகிறது. புதிய ஏற்பாட்டு போதனையின் முன்னுரிமைகளைப் பின்பற்றி, கிறிஸ்துவிடம் வரும் ஒவ்வொரு நபரும் மீட்பின் இறுதி நிலையை நோக்கி ஒரு படியை பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள் என்பதை அறிந்து, நாம் இதை முதன்மையாக சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதன் மூலம் செய்கிறோம். உலகில் கிறிஸ்தவர்களாக வாழ்வதன் மூலமும், அயலார்களுக்கு கிறிஸ்துவின் அன்பைக் காண்பிப்பதன் மூலமும், தேவனின் மகிமை, கனம் மற்றும் குணத்தைப் பிரதிபலிக்கும் வகையில் நம்மைச் சுற்றியுள்ள கலாச்சாரங்களை மாற்றுவதன் மூலமும் நாம் அதைச் செய்கிறோம். இயேசு தனது மீட்பின் வேலையை முடிக்க திரும்பும் நாளை எதிர்பார்ப்பதன் மூலமும் ஜெபிப்பதன் மூலமும் நாம் அதைச் செய்கிறோம்.

தற்போதைய யுகத்தில் பழைய ஏற்பாட்டு சபைக்கும் புதிய ஏற்பாட்டு சபைக்கும் இடையேயான தொடர்ச்சியின் இரண்டாவது காரியம் என்னவென்றால், தேவ ஜனங்களின் இரண்டு கூடுகைகளிலும் விசுவாசிகள் மற்றும் அவிசுவாசிகள் உள்ளனர் என்பதே.

## விசுவாசிகள் மற்றும் அவிசுவாசிகள்

பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளில், தேவனுடைய சபை ஒருபோதும் பூரணமானதாக இருக்கவில்லை என்பதை நினைவில் கொள்ளுங்கள். பழைய



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஏற்பாட்டில், சில பண்டைய இஸ்ரவேலர்கள் தேவனுக்கு விசுவாசமாக இருந்து தேவனின் ஆசீர்வாதங்களைப் பெற்றனர். ஆனால் பலர் தேவனுக்கு எதிராக அவிசுவாசத்துடன் கலகம் செய்து அவருடைய தெய்வீக சாபங்களுக்கு ஆளாகினர். பழைய ஏற்பாடு முழுவதும் இதை நாம் காண்கிறோம், ஆனால் இது லேவியராகமம் 26 மற்றும் உபாகமம் 27–30 இல் காணப்படுவது போல் தேவனின் உடன்படிக்கை ஆசீர்வாதங்கள் மற்றும் சாபங்களின் சுருக்கங்களில் மிக தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

புதிய ஏற்பாட்டு சபையான இயேசுவின் சீஷர்களின் கூடுகையிலும் அதே விஷயம் உண்மையாக இருக்கிறது. நம் சபைகளில் விசுவாசிகள் மத்தியில் எப்போதும் அவிசுவாசிகள் கலந்திருப்பார்கள். உதாரணமாக, யூதாஸ் அப்போஸ்தலர்களிடையே விசுவாசமற்றவனாக இருந்தான். யோவான் 6:70-71 இல் இதைக் குறித்து குறிப்பாக நமக்கு சொல்லப்படுகிறது, மேலும் அவன் கிறிஸ்துவைக் காட்டிக்கொடுப்பதிலும் இதைப் பார்க்கிறோம். சபையின் கலவையான தன்மை வெளிப்படுத்தின விசேஷம் 2–3 இல் உள்ள சபைகளுக்கு எழுதிய கடிதங்களிலும் தெளிவாகத் தெரிகிறது. வெளிப்படுத்தின விசேஷத்தில் உள்ள இந்த அதிகாரங்கள் சபையில் உண்மையான விசுவாசிகள் ஜெயங்கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கின்றன. ஆனால் ஜெயங்கொள்ளாதவர்கள் தங்கள் விசுவாசமற்ற இருதயங்களை வெளிப்படுத்துவார்கள் என்றும் அவைகள் எச்சரிக்கின்றன. மேலும் 1 யோவான் நிருபத்தின் பெரும்பகுதி சபையில் உண்மையான மற்றும் பொய்யான விசுவாசிகளை வேறுபடுத்துவதற்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. இதைத் தாண்டி, மற்ற பல வேத பகுதிகள் சபையில் உள்ள கள்ள போதகர்களைப் பற்றி எச்சரிக்கின்றன, அல்லது இறுதிவரை விடாமுயற்சியுடன் விசுவாசத்தில் தொடர்கிறேன் என்பவர்கள் தங்களுடைய விசுவாசத்தை நிரூபிக்க ஊக்குவிக்கின்றன.

2 கொரிந்தியர் 13:5 இல், பவுலும் இந்த உண்மையை அங்கீகரித்தார், மேலும் மக்கள் அதைப் பற்றி சிந்திக்க ஊக்குவித்தார். அங்கே அவர் என்ன சொல்லியிருக்கிறார் என்று கவனிக்கவும்:

> நீங்கள் விசுவாசமுள்ளவர்களோவென்று உங்களை நீங்களே சோதித்து அறியுங்கள்; உங்களை நீங்களே பரீட்சித்துப்பாருங்கள். இயேசுகிறிஸ்து உங்களுக்குள் இருக்கிறாரென்று உங்களை நீங்களே அறியீர்களா? நீங்கள் பரீட்சைக்கு நில்லாதவர்களாயிருந்தால் அறியீர்கள். (2 கொரிந்தியர் 13:5)

சபையில் உறுப்பினராகுதல், ஞானஸ்நானம் எடுத்தல் மற்றும் விசுவாசத்தை அறிக்கையிடுதல் போன்ற விஷயங்கள் இயேசு கிறிஸ்துவில் இரட்சிக்கிற விசுவாசத்தின் நிச்சய அடையாளங்கள் அல்ல என்பதை அனைவரும் அங்கீகரிக்க வேண்டும் என்று பவுல் விரும்பினார். விசுவாசத்தோடு கிறிஸ்துவிடம் உண்மையாக வராத மக்களும் இவற்றைச் செய்கிறார்கள். எனவே, சபையில் உள்ள மக்கள் தங்களை சோதிக்கும்படியும் அவர்கள் உண்மையிலேயே இரட்சிப்பிற்காக கிறிஸ்துவை விசுவாசிக்கிறார்கள் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளும்படியாகவும் பவுல் ஊக்குவித்தார்.

நிச்சயமாக, மனிதர்களாகிய நாம் மற்றொரு நபரின் இருதயத்தின் நிலையை அறிய முடியாது. நம்மால் அவர்களின் செயல்களை பார்க்கவும் அவர்களின் வார்த்தைகளை கேட்கவும் மட்டுமே முடியும். எனவே, உண்மையான விசுவாசிகள் யார் என்று நம்மால் பெரும்பாலும் சொல்ல இயலாது. ஆனால் நம் சபைகளில் அவிசுவாசிகள் இருக்கக்கூடும் என்ற அறிவு இன்னும் நம்மையும் சபையில் இருக்கிற மற்றவர்களையும் நாம் பார்க்கும் விதத்தை பாதிக்க வேண்டும். அவர்கள் யார் என்று நமக்குத் தெரியாவிட்டாலும், விசுவாசத்திற்குள் இன்னும் வராதவர்களைக் இரட்சிப்பதற்காக முழு சபைக்கும் சுவிசேஷத்தைப் போதிக்கவும் பிரசங்கிக்கவும் நாம் ஞாபகமாய் இருக்க வேண்டும். சபையில் தேவனைத் தேடுபவர்களை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும், அவர்கள் இன்னும் கிறிஸ்துவை விசுவாசிக்கவில்லை என்றாலும் அவர்களை உற்சாகம் இழக்கச் செய்யக்கூடாது. விசுவாசம் மற்றும் முதிர்ச்சியில் பரந்த பன்முகத்தன்மை இருப்பதை அறிந்து நாம் மற்றவர்களிடம் நீண்ட காலமாக சபையில் இருக்கிற மக்களிடமும் பொறுமையாக இருக்க வேண்டும்.

பழைய ஏற்பாட்டு சபைக்கும் புதிய ஏற்பாட்டு சபைக்கும் இடையிலான தொடர்ச்சியின் மூன்றாவது காரியம் என்னவென்றால், அவர்கள் தேவனுக்கு செய்ய வேண்டிய கடமைகளும் ஒரே மாதிரியாக இருந்தன என்பதாகும்.

## கடமைகள்

இரண்டு ஏற்பாடுகளிலும் உள்ள தேவ ஜனங்களுக்கும் தேவனை நேசிப்பதற்கும், அவருடைய ராஜ்யத்தை உலகம் முழுவதும் பரப்புவதற்கும், அவருக்கு மகிமையைக் கொண்டுவருவதற்குமான பொறுப்பு வழங்கப்பட்டது. தேவனின் மீதான அன்பைப் பொறுத்தவரை, உபாகமம் 6:5-6 பழைய ஏற்பாட்டு சபை தேவனை இருதயத்திலிருந்து நேசிக்கவும், அவருடைய பிரமாணத்தை இருதயத்திலிருந்து கீழ்ப்படியவும் போதித்தது.

அதே போல, புதிய ஏற்பாட்டு சபை தேவனை நேசிக்கவும் அவருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படியவும் அழைக்கப்படுகிறது. மத்தேயு 22:37 இல் இயேசு போதித்தபடி, தேவன் மீது உள்ள இருதயப்பூர்வமான அன்பே பிரமாணத்தின்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

மிகப்பெரிய கட்டளையாகும். மேலும் 1 யோவான் 5:3 இல் யோவான் போதித்தபடி, தேவன் மீதுள்ள இருதயப்பூர்வமான அன்பானது அவருடைய கட்டளைகளுக்கு இருதயப்பூர்வமாக கீழ்ப்படிய வைக்கிறது.

> மக்கள் அடிக்கடி கேட்கும் கேள்விகளில் ஒன்று பழைய ஏற்பாட்டு பிரமாணத்தை புதிய ஏற்பாட்டு சபை பின்பற்ற வேண்டுமா என்பதுதான். இதற்கு பதில் ஒரு தெளிவான ஆம் மற்றும் இல்லை என்பதே. பழைய ஏற்பாட்டில் உள்ள, மோசேயின் ஆகமங்களில் காணப்படும் குறிப்பிட்ட குறிப்புகள் உண்மையில் நமக்காக அகற்றப்படுகின்றன என்ற அர்த்தத்தில் இல்லை என்கிற பதில் ஆகும். நம் வீட்டில் உள்ள சிறுவர்களுக்கு விருத்தசேதனம் செய்ய வேண்டிய அவசியமில்லை. நாம் வருடத்திற்கு மூன்று முறை தேவாலயத்திற்கு செல்ல வேண்டியதில்லை. நாம் இவைகளைச் செய்ய தேவையில்லை ... நீங்கள் பட்டியலில் இன்னும் அதிகம் சேர்த்துக்கொள்ளலாம். உண்மையில், இது அப்போஸ்தலருடைய நடபடிகள் 15 இல் பதிவு செய்யப்பட்ட எருசலேமில் உள்ள ஆலோசனைச் சங்கத்தின் விவாதமாகும். இருப்பினும், பழைய ஏற்பாட்டின் நியாயப்பிரமாணத்தின் நோக்கம் என்ன? நியாயப்பிரமாணம் தேவனுடைய குணம் மற்றும் இயல்பு மற்றும் நாம் பகிர்ந்து கொள்ள எதிர்பார்க்கப்படும் குணம் மற்றும் இயல்பை நமக்கு வெளிப்படுத்துகிறது, அந்த வகையில், நியாயப்பிரமாணம் இன்னும் நமக்கு பொருந்துகிறது. இதை நீங்கள் பவுலின் நிருபங்களில் பார்க்கிறீர்கள் என்று நினைக்கிறேன். பவுல் தனது வாசகர்களிடம், ”இல்லை, நீங்கள் சுதந்திரமாக இருக்கிறீர்கள். அந்த காரியங்களை எல்லாம் நீங்கள் செய்ய வேண்டியதில்லை. நீங்கள் சுதந்திரமாக இருப்பதால், நீங்கள் திருடப் போவதில்லை, பொய் சொல்லப் போவதில்லை, இச்சிக்கப் போவதில்லை, விபச்சாரம் செய்யப் போவதில்லை.” எனவே, இரட்சிப்புக்காக கிறிஸ்தவர்கள் தோராவைக் கடைப்பிடிக்க வேண்டியது அவசியமா? நிச்சயமாக இல்லை. ஆனால் இலவசமாக இரட்சிக்கப்பட்டவர்களாக, நாம் தேவனின் வாழ்க்கையை பகிர்ந்துகொள்ளவும் வெளிப்படுத்தவும் எதிர்பார்க்கப்படுகிறோமா? ஆமாம்.
>
> Dr. ஜான் ஆஸ்வால்ட்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளில் உள்ள தேவ ஜனங்கள் தேவனுடைய ராஜ்யத்தை பரப்ப வேண்டும் என்பதைக் கவனியுங்கள். ஆதியாகமம் 17:4-5 இல், ஆபிரகாம் பல தேசங்களின் பிதாவாக இருப்பார் என்று தேவன் வாக்குத்தத்தம் அளித்ததை பழைய ஏற்பாட்டு சபை அறிந்திருந்தது. ரோமர் 4:13 இல் பவுல் கற்பித்தபடி, பழைய ஏற்பாட்டு சபை இந்த வாக்குத்தத்தம் தேவனுடைய ராஜ்யத்தை விசுவாசத்தால் உலகம் முழுவதும் பரப்ப அவர்கள் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்று அறிந்திருந்தது. அதே போல, புதிய ஏற்பாட்டு சபை இன்னும் ஒவ்வொரு தேசத்திற்கும் சுவிசேஷத்தை எடுத்துச் சென்று இந்தத் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. மத்தேயு 28:19 இல் இயேசு தனது சபைக்கு கட்டளையிட்டபடி:

> நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்குங்கள் (மத்தேயு 28:19).

பழைய ஏற்பாட்டு இஸ்ரவேல் மற்றும் புதிய ஏற்பாட்டு சபையால் பகிரப்பட்ட மூன்றாவது கடமை தேவனை மகிமைப்படுத்துவதாகும். பழைய ஏற்பாட்டு சபைக்கு, இதை சங்கீதம் 86:12, சங்கீதம் 115:18 களிலும் மற்றும் அப்போஸ்தலருடைய நடபடிகள் 17:24-28 போன்ற பழைய ஏற்பாட்டு உலகைக் குறித்த புதிய ஏற்பாட்டு விளக்கங்களிலும் இதைப் பார்க்கிறோம். ஆதியாகமம் 1:27 போதிப்பது போல, நாம் தேவனின் சாயலில் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம் என்பதன் மூலமும் இது குறிக்கப்படுகிறது. பழைய ஏற்பாட்டு உலகில், சாயல்கள் ராஜாக்களின் சிலைகளாக இருந்தன, அவை மக்கள் ராஜாக்களை நேசிக்கவும், ராஜாக்களுக்கு கீழ்ப்படியவும், அவர்களை மகிமைப்படுத்தவும் நினைவூட்டின. தேவனின் சாயல்களாக, மனிதர்கள் அவருக்கு பெருமை சேர்க்க வடிவமைக்கப்பட்டுள்ளனர்.

அதே போல, புதிய ஏற்பாட்டு சபையும் தேவனை மகிமைப்படுத்த வேண்டும். இது 1 கொரிந்தியர் 10:31, 1 பேதுரு 4:11, வெளிப்படுத்தின விசேஷம் 4:11 மற்றும் பல இடங்களில் போதிக்கப்படுகிறது.

சபையில் தேவன் கொடுக்கும் பொறுப்புகள் சுமையானவை கிடையாது – நாம் கிறிஸ்துவில் இருக்கும்போது அது சுமையாக இருக்காது. நாம் நமது சொந்த தகுதியின் அடிப்படையில் தேவனுக்கு முன்பாக நிற்க வேண்டியிருந்தால், நாம் செய்ய வேண்டிய கடமைகள் நம்மால் தாங்க முடியாத அளவுக்கு இருக்கும். ஆனால் கிறிஸ்துவில் இருக்கும்போது, சபையில் உள்ள உண்மையான விசுவாசிகள் தண்டனையிலிருந்து தப்பியிருக்கிறார்கள், மேலும் தோல்விக்கு பயப்படாமல், கர்த்தருடைய ராஜ்யத்தை பரப்புவதற்கும், அவருடைய பிரமாணத்திற்கு கீழ்படிவதற்கும், அவருக்கு மகிமையைக் கொண்டுவருவதற்கும் வேலை செய்ய முடிகிறது. உண்மையில், வெற்றிக்கு இறுதியில் உத்தரவாதம் அளிக்கப்படுகிறது. தற்காலிக பின்னடைவுகளை நாம் சந்திக்க நேர்ந்தாலும், வரலாறு தேவனின் தடையற்ற வெற்றியை நோக்கி நகர்கிறது. மேலும் அது சபை



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

மூலம் முன்னேறி வருகிறது. எனவே, நாம் எவ்வளவு கீழ்ப்படிந்திருக்கிறோமோ – அவ்வளவு அதிகமாக நாம் நமது கடமைகளைக் கடைப்பிடிக்கிறோம் – விரைவில் தேவன் தனது ராஜ்யத்தை அதன் அருமையான நிறைவேற்றத்திற்கு கொண்டு வருவார்.

பழைய ஏற்பாட்டின் ஆரம்ப கட்டத்திலிருந்து வளர்ந்து வந்த சபை இயேசுவால் அங்கீகரிக்கப்பட்ட சரீரமாக உருவாகிய விதத்தைப் பார்த்தால், சபை தேவனால் முழுமையாக அங்கீகரிக்கப்பட்டது என்பது தெளிவாகிறது. சபை இருக்க வேண்டும் என்று தேவன் விரும்புவதாலும் அது அவருடைய நோக்கத்தை நிறைவேற்றுகிறதாலும் சபை இருக்கிறது. இது வெறும் மனித கண்டுபிடிப்பு அல்ல. மேலும் இது வேதாகம மதத்தின் சீர்கேடு அல்ல. இது கிறிஸ்துவின் மணவாட்டியும் சரீரமுமாகும். மேலும் தேவனால் நேசிக்கப்பட்டு, அவருடைய ஊழியம் மற்றும் மகிமைக்காக அர்ப்பணிக்கப்பட்டது.

சபையின் தெய்வீக ஒப்புதலை மனதில் கொண்டு, சபை பரிசுத்தமானது என்கிற நம்முடைய இரண்டாவது முக்கிய தலைப்புக்கு திரும்ப தயாராக இருக்கிறோம்.

# பரிசுத்தமானது

வேதாகமம் முழுவதும், பலவிதமான சொற்கள் பரிசுத்தத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகின்றன. புதிய ஏற்பாட்டில், சபை பரிசுத்தமானது அல்லது பரிசுத்தமாக்கப்பட்டது என்று விவரிக்கப்பட்டுள்ளது. சபையின் ஒரு பகுதியாக இருக்கும் மக்கள் பரிசுத்தவான்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். பரிசுத்தமான, பரிசுத்தமாக்கப்பட்ட மற்றும் பரிசுத்தவான்கள் ஆகிய இந்த மூன்று வார்த்தைகளும் – கிரேக்க மொழியில் ஒரே வார்த்தைக் குழுவிலிருந்து வந்தவை. ”பரிசுத்தமான” என்கிற வார்த்தை *ஹஜியோஸ்* என்ற பெயரடையிலிருந்து மொழிபெயர்க்கப்படுகிறது. ”பரிசுத்தமாக்கப்பட்டது” என்பது *ஹாகியாசோ* என்ற வினைச்சொல்லிலிருந்து வந்தது, பரிசுத்தமாக்கு என்பது இதன் அர்த்தம். மேலும் ”பரிசுத்தவான்கள்” என்கிற பதம் *ஹாகியோஸ்* என்கிற பெயர்ச்சொல்லிலிருந்து வருகிறது, பரிசுத்தமாக இருக்கிறவன் என்பது இதன் அர்த்தம்.

பழைய ஏற்பாட்டில் இதே கருத்துகள் பின்வரும் எபிரெய வார்த்தைகளால் குறிப்பிடப்படுகின்றன; *கடோஷ்* என்கிற பெயரடைக்கு பரிசுத்தமான என்று அர்த்தம்; *கடாஷ்* என்ற வினைச்சொல்லுக்கு பரிசுத்தமாக்கு என்று அர்த்தம்; மற்றும் *கோடேஷ்* என்ற பெயர்ச்சொல்லுக்கு பரிசுத்தமாக இருக்கிறவன் என்பது என்று அர்த்தம்.

இப்போது, நாம் பரிசுத்தத்தைப் பற்றி பேசும்போது, பல கிறிஸ்தவர்கள் தேவனை அவருடைய சிருஷ்டிகளிலிருந்து வேறுபடுத்துவது தான் பரிசுத்தம் என்று நினைக்கிறார்கள். தேவனின் பரிசுத்தமானது முற்றிலுமாக அவருடைய குணத்தைப் பற்றியது அல்லது அவர் சிருஷ்டிகளிலிருந்து முற்றிலும் வேறுபட்டிருப்பதைக் குறிக்கிறது என்று அடிக்கடி கூறப்படுகிறது. ஆனால் வேதத்தில் ”பரிசுத்த” என்ற வார்த்தை இந்த ஒரே வழியில் மட்டும் பயன்படுத்தப்படுவதில்லை. சிருஷ்டிகளிலும் பொருள்களிலும் தேவனுடைய பரிசுத்தத்தை பிரதிபலிக்கும் விசேஷித்த குணங்கள் இருக்கும்போது அவைகளை பரிசுத்தமானவை என்று வேதம் குறிப்பிடுகிறது. இந்த அர்த்தத்தில்தான் அப்போஸ்தல விசுவாசப் பிரமாணம் சபை பரிசுத்தமானது என்று கூறுகிறது.

சபை இரண்டு பகுதிகளில் பரிசுத்தமானது என்ற கருத்தை நாம் ஆராய்வோம். முதலில், ”பரிசுத்த” என்ற வார்த்தையின் வரையறையை ஆராய்வோம். இரண்டாவதாக, பரிசுத்தமாக இருப்பவர்களை அடையாளம் காண இந்த வரையறையைப் பயன்படுத்துவோம். பரிசுத்தம் என்பதன் வேதாகம வரையறையுடன் ஆரம்பிக்கலாம்.

## வரையறை

வேதத்தில், பரிசுத்தம் என்பதின் கருத்து சிக்கலானது. ஆனால் வேதம் எவரையோ அல்லது எதையோ பரிசுத்தமானதாகக் குறிப்பிடும் போது, அது தார்மீக ரீதியாக தூய்மையானது என்பதைக் குறிக்கிறது, அதனுடன் தொடர்புடைய அர்த்தத்தில், ”பரிசுத்தமான” என்பது தேவனுக்காக விசேஷித்த சேவையில் பயன்படுத்த தனியாக பிரித்தெடுக்கப்பட்ட மக்களையும் விஷயங்களையும் குறிக்க முடியும் என்று சொல்வது நியாயமானது.

இந்த வரையறையின் இரண்டு அம்சங்களையும், தார்மீகமாக தூய்மையாயிருத்தலுடன் தொடங்கிப் பார்க்கலாம். யாராவது அல்லது ஏதாவது தார்மீக ரீதியாக தூய்மையானவர் அல்லது தூய்மையானது என்று நாம் கூறும்போது, அது அல்லது அவர் பாவம் மற்றும் சீர்கேடுக்கு அப்பாற்பட்டது அல்லது அப்பாற்பட்டவர் என்று அர்த்தமாகும். தார்மீக தூய்மை என்ற அர்த்தத்தில், பரிசுத்தம் தேவனுடைய குணத்தில் வேரூன்றியுள்ளது. 2 இராஜாக்கள் 19:22, நீதிமொழிகள் 9:10, ஏசாயா 30:11-15 மற்றும் 1 யோவான் 2:20 போன்ற பல இடங்களில் தேவனை பரிசுத்தர் என்று வேதம் விவரிக்கிறது.

> தேவன் நம்மை விட பெரியவர் என்பது மட்டுமல்ல; தேவன் எல்லையற்றவர் மற்றும் நாம் எல்லைகுட்பட்டவர்கள் என்பது மட்டுமல்ல, அவர் நம்மை விட ஒழுக்க ரீதியாக வேறுபட்டவர் என்பது தான் இங்கே முக்கியமான காரியமாகும். அவருக்குள்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> இருளோ அல்லது இடம்பெயரும் நிழலோ இல்லை. அவரிடம் தீய தூண்டுதலோ அல்லது தவறு செய்வதற்கான விருப்பமோ இல்லை. அவரிடம் தீமை செய்ய வேண்டுமென்கிற விருப்பம் எள்ளளவும் இல்லை.
>
> Dr. ஜே. லிகோன் டங்கன் III

தேவன் முற்றிலும் பரிசுத்தமானவர் என்பதால், அவருடைய முன்னிலையில் நுழைந்த எந்த பாவமும் அவருடைய நியாத்தீர்ப்புக்கும் கோபத்திற்கும் உட்பட்டது. 1 சாமுவேல் 6:20, 2 இராஜாக்கள் 24:3, மற்றும் எபிரெயர் 12:14 போன்ற இடங்களில் இதை நாம் பார்க்கிறோம். தேவன் நியாயத்தீர்ப்பை சிறிது காலம் தள்ளிப்போட்டாலும், அவருடைய பரிசுத்த பிரசன்னம் இறுதியில் யாருடைய பாவம் மறைக்கப்படவில்லையோ அவர்களை அழித்துவிடும். இதன் விளைவாக, அவருடைய பிரசன்னத்தில் நுழையும் யாராவது அல்லது ஏதாவது முதலில் பரிசுத்தமாக்கப்பட வேண்டும். உதாரணமாக, ஏசாயா 6:3-7 இல் உள்ள ஏசாயாவின் வார்த்தைகளைக் கவனியுங்கள்:

> [சேராபீன்கள்] ஒருவரை ஒருவர் நோக்கி இவ்வாறு சொன்னார்கள்: ”சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்” … ”ஐயோ!” என்று அழுதேன். ”நான் அதமானேன்! நான் அசுத்த உதடுகளுள்ள மனுஷன், அசுத்த உதடுகளுள்ள ஜனங்களின் நடுவில் வாசமாயிருக்கிறவன்; சேனைகளின் கர்த்தராகிய ராஜாவை என் கண்கள் கண்டதே.” அப்பொழுது சேராபீன்களில் ஒருவன் பலிபீடத்திலிருந்து, தன் கையிலே பிடித்த குறட்டால் ஒரு நெருப்புத் தழலை எடுத்து, என்னிடத்தில் பறந்து வந்து, அதினால் என் வாயைத் தொட்டு, இதோ … ”இது உன் உதடுகளைத் தொட்டதினால் உன் அக்கிரமம் நீங்கி, உன் பாவம் நிவிர்த்தியானது” என்றான் (ஏசாயா 6:3-7).

இந்த வேத பகுதியில், ஏசாயா தனது குற்றம் அல்லது பாவத்தின் காரணமாக பரிசுத்த தேவனின் விசேஷித்த பிரசன்னத்தில் அழிக்கப்பட்டுவிடுவார் என்று அஞ்சினார். எனவே, தேவனுக்கு சேவை புரியும் தேவதூதர்களில் ஒருவனான சேராபீன், தேவனின் பரிசுத்த பலிபீடத்திலிருந்து எடுக்கப்பட்ட சூடான நிலக்கரியால் ஏசாயாவின் பாவத்தை கழுவினான். இந்த சுத்திகரிப்பு மூலம், ஏசாயா பாவத்திலிருந்து கழுவப்பட்டார் – அவர் பரிசுத்தமாக்கப்பட்டார். மேலும் அவருடைய புதிய பரிசுத்தத்தினால், அவர் நியாயத்தீர்ப்பின் கீழ் வராமல் தேவனின் பிரசன்னத்தில் நிற்க முடிந்தது.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஏசாயா 6 இல் நாம் பார்ப்பது போல், தேவனின் பரிசுத்தமானது அவருடைய பகிர்ந்து கொள்ளக்கூடிய குணாதிசயங்களில் ஒன்றாகும் – இது அவரை பூரணமாகவும் முழுமையாகவும் வகைப்படுத்தும் குணாதிசயமாகும், ஆனால் அது அவருடைய சிருஷ்டிகளை எல்லைக்குட்பட்ட வழிகளில் வகைப்படுத்தவும் செய்யும். எபேசியர் 1:4, எபிரெயர் 12:14 மற்றும் 1 பேதுரு 1:15-16 போன்ற விசுவாசிகள் பரிசுத்தமாக இருக்க வேண்டும் என்பதற்கான பல வேதாகம கட்டளைகளுக்குப் பின்னால் பரிசுத்தத்தின் பகிர்ந்துகொள்ளக்கூடிய தன்மை உள்ளது. தேவனைப் போல் ஒழுக்க ரீதியாக தூய்மையாக இருக்க நாம் பாடுபட வேண்டும். நிச்சயமாக, நம் சொந்த பலத்தின் மூலம் நாம் இந்த முயற்சியில் வெற்றி பெற முடியாது. ஆனால் கிறிஸ்துவுக்கு சரியான தார்மீக தூய்மை உள்ளது. நாம் அவரில் இருக்கும்போது, அவருடைய நீதி நமக்கு வரவு வைக்கப்படுகிறது, இதனால் நாம் முற்றிலும் தூய்மையானவர்களாகவும், பாவத்திலிருந்தும் சீர்கேட்டிலிருந்தும் முற்றிலும் விடுபட்டவர்களாகக் கருதப்படுகிறோம்.

பரிசுத்த என்கிற வார்த்தையினுடைய நம் வரையறையின் இரண்டாவது அம்சம் என்னவென்றால், இது தேவனுக்காக விசேஷித்த சேவையில் பயன்படுத்த ஒதுக்கப்பட்ட மக்களையும் விஷயங்களையும் விவரிக்கிறது என்பதாகும். இந்த அர்த்தத்தில், விஷயங்கள் தார்மீக ரீதியாக தூய்மையாக இல்லாவிட்டாலும் பரிசுத்தமாக இருக்கலாம். ஒரு உதாரணத்திற்காக, 1 கொரிந்தியர் 7:14 இல் பவுல் எழுதியதைக் கவனியுங்கள்:

> அவிசுவாசியான புருஷன் தன் மனைவியால் பரிசுத்தமாக்கப்படுகிறான்; அவிசுவாசியான மனைவியும் தன் புருஷனால் பரிசுத்தமாக்கப்படுகிறாள். (1 கொரிந்தியர் 7:14).

இங்கே, ஒரு விசுவாசி ஒரு அவிசுவாசியை விவாகம் செய்யும்போது, அவிசுவாசி பரிசுத்தமாக்கப்படுகிறார், அல்லது மற்ற மொழிப்பெயர்ப்புகள் சொல்வது போல், அவிசுவாசி ”பரிசுத்தமாக்கப்படுகிறார்” என்று பவுல் கூறினார். அவிசுவாசியானவர் – கிறிஸ்துவில் தேவனால் ஒழுக்க ரீதியாக சுத்திகரிக்கப்படவில்லை என்றாலும் கூட தேவனுடன் அடையாளம் காணப்பட்டு அவருடைய சேவைக்கு உபயோகமானவராக ஆக்கப்படுகிறார்.

சில கிறிஸ்தவர்கள் தேவன் தனது சேவைக்காக பூரணமில்லாத மற்றும் பரிசுத்தமற்ற மக்களை பிரித்து எடுக்கிறார் என்று விசித்திரமாக நினைக்கிறார்கள். ஆனால் நாம் இதைப் பற்றி சிந்தித்தால், தேவன் அவருடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்காக தனியாகப் பிரித்தெடுக்கப்பட்ட அவிசுவாசிகளின் பல உதாரணங்களை வேதம் வழங்குகிறது. அப்போஸ்தலனாகிய யூதாஸ் நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவை காட்டிக்கொடுத்தார் என்பதே இதற்கு மிகப் பெரிய உதாரணம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இயேசுவே போதித்தபடி, யூதாஸ் அதற்காகவே தேர்ந்தெடுக்கப்பட்டார். மேலும் அவரது காட்டிக்கொடுத்தல் தேவனுக்கு வழங்கப்பட்ட தூய்மையான, மிக புனிதமான பலியாகும் – அதாவது அவரது குமாரனின் விலைமதிப்பற்ற மரணம் ஆகும். தேவன் தனது சேவையில் பொல்லாத அவிசுவாசிகளை கூட பயன்படுத்த முடிந்தால், அவரை நேசிக்கும் பரிசுத்தவான்களின் விசேஷித்த சேவையால் அவர் இன்னும் எவ்வளவு அதிகமாக மகிமைப்பட முடியும்?

இப்போது, நாம் பார்த்தபடி, பரிசுத்தத்தைப் பற்றிய கருத்து வேதத்தில் பல பரிமாணங்களைக் கொண்டுள்ளது. சபையைப் பற்றி விவரிப்பதற்காக ”பரிசுத்தமான” அல்லது ”பரிசுத்தப்படுத்தப்பட்ட” அல்லது ”பரிசுத்தவான்கள்” போன்ற வார்த்தைகளைப் பயன்படுத்தும் போது வேதம் என்ன அர்த்தம் கொள்கிறது என்பதைப் புரிந்துகொள்ள நாம் கவனமாக இருக்க வேண்டும். சில சமயங்களில், கிறிஸ்துவின் பரிசுத்தத்தினால் சபையில் உள்ள உண்மையான விசுவாசிகள் ஒழுக்க ரீதியாக தூய்மையானவர்கள் என்ற உண்மையை நோக்கி வேதம் நம் கவனத்தைத் திருப்புகிறது. மற்ற சமயங்களில், அவர்கள் உண்மையான விசுவாசிகளாக இல்லாவிட்டாலும் தேவனுடைய விசேஷ சேவைக்காக உலகத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட மக்களை அது குறிக்கிறது. சில சமயங்களில், உண்மையான விசுவாசிகள் தேவனுடைய விசேஷ சேவைக்காக பிரித்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற கருத்தை இது குறிக்கிறது.

எது எப்படியிருந்தாலும், நமக்குத் தெரிந்த ஒரு விஷயம் என்னவென்றால், பரிசுத்தமான எல்லாமே தேவனுக்கு விசேஷித்த காரியம் தான். தேவனுடைய நாமத்தை நாம் மதிக்கிறோம், அதை வீணிலே வழங்க மறுக்கிறோம், ஏனென்றால் அது பரிசுத்தமானது. நாம் வேதத்திற்கு நம்மை சமர்ப்பிக்கிறோம், ஏனென்றால் அது நமது பரிசுத்த தேவனின் பரிசுத்த வார்த்தை. தேவன் நம்மை பரிசுத்த வாழ்க்கைக்கு அழைக்கிறார் என்பதை அறிந்து, வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் தார்மீக தூய்மையை மதித்து அதற்காக பாடுபடுகிறோம். நாம் அவருடைய பரிசுத்த சபையில் பங்கேற்று அதற்கு நம்மை சமர்ப்பிக்கிறோம். நாம் பரிசுத்தத்தைக் காணும் இடமெல்லாம், தேவனின் கரம் அங்கே இருப்பதை உணர்கிறோம், மேலும் அதை தெய்வீக மரியாதையுடன் நடத்த சிறப்பு கவனம் எடுத்துக்கொள்கிறோம்.

”பரிசுத்த” என்ற வரையறையை மனதில் கொண்டு, பரிசுத்தமான மக்களின் அடையாளத்தை ஆராய இதைப் பயன்படுத்துவோம்.

## மக்கள்

மிகவும் பரந்த அளவில் சொல்வதானால், தேவனுக்கு விசேஷித்த சேவையில் பயனளிக்கும் வகையில் உலகிலுள்ள மற்றவர்களிலிருந்து



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

பிரித்தெடுக்கப்பட்ட மக்களை வேதம் ”பரிசுத்தவான்கள்” என்று குறிப்பிடுகிறது. உதாரணமாக, பழைய ஏற்பாட்டு இஸ்ரவேல் தேசம் முழுவதும் ”பரிசுத்த” என்று அழைக்கப்பட்டது, ஏனெனில் தேவன் அந்த தேசத்துடன் உடன்படிக்கையில் இருந்தார். யாத்திராகமம் 19:5-6, உபாகமம் 7:6-9 மற்றும் 28:9, மற்றும் எசேக்கியேல் 37:26-28 போன்ற இடங்களில் இதை நாம் பார்க்கிறோம்

இந்த கருப்பொருள் புதிய ஏற்பாட்டு சபையிலும் தொடர்கிறது. உதாரணமாக, லூக்கா 1:72 இல் இயேசு தேவனின் பரிசுத்த உடன்படிக்கையை நிறைவேற்ற வருவதாக பேசுகிறார். சபையானது புதிய உடன்படிக்கையின் புதுப்பிக்கப்பட்ட மற்றும் மீட்டெடுக்கப்பட்ட இஸ்ரவேல் என்று புரிந்து கொள்ளப்பட்டதால், அது பரிசுத்தமானது என்றும் அழைக்கப்படுகிறது. கொலோசெயர் 3:12, எபிரெயர் 10:29 மற்றும் பல இடங்களில் இதை நாம் பார்க்கிறோம். ஒரு உதாரணமாக, 1 பேதுரு 2:9 இல் புதிய ஏற்பாட்டு சபைக்கு பேதுரு எழுதிய வார்த்தைகளை மீண்டும் கவனியுங்கள்:

> நீங்களோ தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள் (1 பேதுரு 2:9).

இங்கே, பேதுரு இஸ்ரவேலின் பரிசுத்தத்தைப் பற்றிப் பேசும் பல பழைய ஏற்பாட்டுப் பகுதிகளிலிருந்து மேற்கோள் காட்டினார், ஆனால் அவர் அவற்றை சபைக்காக பயன்படுத்தினார். அவரது கருத்து என்னவென்றால், பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளில் உள்ள சபையானது ஒரே பரிசுத்த குழுவாகும்.

இருந்தாலும் நாம் பார்த்தபடி, இஸ்ரவேலில் அல்லது புதிய ஏற்பாட்டு சபையில் உள்ள அனைவரும் உண்மையான விசுவாசிகள் அல்ல. அப்படியிருந்தும், அவர்கள் அனைவரும் தேவனுடைய உடன்படிக்கை சமூகத்தின் ஒரு பகுதியாக இருந்ததால் அனைவரும் பரிசுத்தவான்களாக கருதப்பட்டனர், அதாவது தேவனுடன் உடன்படிக்கையில் இருந்த மக்களுக்கு இது பொருந்தும்.

உடன்படிக்கை சமூகத்தில் உள்ள விசுவாசிகளின் பரிசுத்தம் அவிசுவாசிகளின் பரிசுத்தத்தை விட அதிகமாக உள்ளது. அவிசுவாசிகள் தேவனுக்காக பிரித்தெடுக்கப்பட்டதால் மட்டுமே பரிசுத்தவான்களாக இருந்தனர். ஆனால் அவர்கள் பிரித்தெடுக்கப்பட்டதால் மட்டுமல்ல, கிறிஸ்துவில் அவர்கள் ஒழுக்க ரீதியாக பரிசுத்தமாகவும் தேவனுக்குக் கீழ்ப்படிந்தவர்களாகவும் இருந்ததாலேயே விசுவாசிகள் பரிசுத்தமானவர்களாக இருந்தனர். நிச்சயமாக, முழு உடன்படிக்கை சமூகமும் விசுவாசிப்பதே குறிக்கோளாக இருந்தது – அதாவது அனைவரும் தேவனுக்கு உண்மையாக இருக்க வேண்டும் மற்றும் ஒழுக்க ரீதியாக பரிசுத்தமான வாழ்க்கை வாழ வேண்டும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

பரிசுத்தமான மக்களைப் பற்றி சிந்திக்க ஒரு பயனுள்ள வழியை காணக்கூடிய சபைக்கும் காண முடியாத சபைக்கும் இடையிலான பாரம்பரிய வேறுபாட்டில் காண முடியும். காணக்கூடிய சபையில் தொடங்கி இந்த ஒவ்வொரு பிரிவையும் பார்ப்போம்.

## காணக்கூடிய சபை

> காணக்கூடிய சபை நாம் பார்க்கக்கூடிய சபையைக் குறிக்கிறது, அந்த வகையில் இது வெளிப்படையாகத் தெரியும். அப்படியானால், காணக்கூடிய சபை என்பது உலகெங்கும் தங்களை சபை என்று சொல்பவர்களைக் குறிக்கிறது. இன்று உலகில் இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றுவதாகக் கூறும் அனைத்துப் பிரிவுகளும், தேவனின் நோக்கத்தையும் வார்த்தையையும் பின்பற்றுவதாகக் கூறுகின்ற அனைத்தும் இதில் அடங்கும். அது பல பிரிவுகளை உள்ளடக்கும், எந்த குறிப்பிட்ட பிரிவோடும் தங்களை அடையாளப்படுத்திக் கொள்ளாத ஆனால் தங்களை கிறிஸ்துவின் சீஷர்கள் என்று கருதுபவர்களும் இதில் அடங்குவர்.
>
> Dr. மார்க் எல். ஸ்ட்ராஸ்

எந்த தருணத்திலும், காணக்கூடிய சபையில் தங்கள் இருதயங்களின் நிலை எப்படியிருந்தாலும், கூடிவருகிற சபைக்கு தவறாமல் வரும் அனைவரும் இதில் அடங்குவர். காணக்கூடிய சபையின் ஒரு பகுதியாக மக்களைக் கணக்கிட பல்வேறு வழிகள் உள்ளன. புதிய ஏற்பாட்டில் ஞானஸ்நானம் அல்லது பழைய ஏற்பாட்டில் விருத்தசேதனம் போன்றவைகளால் தேவனின் உடன்படிக்கையில் அவர்கள் உறுதிப்படுத்தப்படலாம். அல்லது அவர்கள் கிறிஸ்துவில் விசுவாசத்தைக் கொண்டிருக்கலாம் அல்லது வெளிப்படுத்தலாம். சபைகளில் உத்தியோகபூர்வ உறுப்பினர்களைப் பராமரிக்காத, அல்லது ஞானஸ்நானம் போன்ற சடங்குகளை உறுதிப்படுத்தும் உடன்படிக்கையைப் பின்பற்றாத அவர்கள் சபையின் போதனைக்கு தவறாமல் அடிபணிவதால் அவர்கள் உடன்படிக்கை உறுப்பினர்களாகக் கருதப்படலாம். அல்லது, 1 கொரிந்தியர் 7:14 இல் பவுல் கற்பித்தபடி, அவர்கள் வெறுமனே ஒரு விசுவாசமுள்ள பெற்றோர் அல்லது வாழ்க்கைத் துணையை கொண்டிருக்கலாம்.

உதாரணமாக, பழைய ஏற்பாட்டில், அவர்கள் அனைவருக்கும் இரட்சிக்கிற விசுவாசம் இல்லாதிருந்தும், முழு இஸ்ரவேல் தேசமும் சபையின் ஒரு பகுதியாக இருந்தது. குறைந்தபட்சம், அவர்கள் அனைவரும் தேசத்திற்குள் இருந்தனர்.

இதைத் தாண்டி, ஆதியாகமம் 17 இல் தேவன் அறிவுறுத்தியபடி, அவர்கள் அனைவரும் ஆண்களின் விருத்தசேதனத்தின் மூலம் தேவனுடைய உடன்படிக்கையில் உறுதிப்படுத்தப்பட்டனர்.

புதிய ஏற்பாட்டில், இதே போன்ற ஒன்றை நாம் காண்கிறோம். சபைக் கூட்டங்களின் ஒரு பகுதியாக இருந்த அனைவரும் சபையின் ஒரு பகுதியாக எண்ணப்பட்டனர். இதில் விசுவாசத்தை அறிக்கையிட்ட அனைவரும், ஞானஸ்நானம் பெற்ற அனைவரும், விசுவாசிகளின் குழந்தைகள் மற்றும் வாழ்க்கைத் துணைவர்கள் மற்றும் பெரும்பாலும் அவர்களின் வீட்டு வேலைக்காரர்கள் மற்றும் அடிமைகள் அடங்குவர். உதாரணமாக, பவுல் பல்வேறு சபைகளுக்கு கடிதங்கள் எழுதியபோது, அந்த சபைகளுடன் நேரடியாக தொடர்புடைய அனைவரும் அந்த கடிதங்களைப் படிக்க வேண்டும் என்று அவர் விரும்பினார். கிறிஸ்தவர்களுக்கு அவர்கள் உண்மையிலேயே விசுவாசம் வைத்திருக்கிறார்களா என்று சோதிக்கும்படி அவருடைய அறிவுரைகளிலிருந்து நாம் பார்க்க முடிந்தபடி, சபைக்குள் அவிசுவாசிகள் இருப்பார்கள் என்று பவுல் முழுமையாக எதிர்பார்த்தார். 2 கொரிந்தியர் 13:5 போன்ற பகுதிகளில் இதை நாம் பார்க்கிறோம். மத்தேயு 13:24-30 இல் உள்ள கோதுமை மற்றும் களை பற்றிய உவமையிலும் இயேசு அதே எதிர்பார்ப்பைக் கொண்டிருந்தார், அங்கு அவர் அவிசுவாசிகளை சபையிலிருந்து வெளியேற்ற வேண்டாம் என்று கூறினார். வெளிப்படுத்தின விசேஷம் 2–3 இல் உள்ள சபைகளுக்கு எழுதிய கடிதங்களிலும் நாம் அதையே காண்கிறோம், அங்கு இயேசு அவர்களை ஜெயங்கொள்ளவும் இறுதிவரை சகித்துக்கொள்ளவும் தொடர்ந்து ஊக்குவித்தார். எபிரெயர் 6:4-8 மற்றும் 10:29 போன்ற பகுதிகளில் புதிய உடன்படிக்கையை மீறுவதற்கு எதிரான எச்சரிக்கைகளிலும் அதே முக்கியத்துவத்தை நாம் காண்கிறோம்.

ஒரு உதாரணத்திற்கு, எபிரெயர் 10:29 இல் உள்ள வார்த்தைகளை கவனிக்கவும்:

> தேவனுடைய குமாரனைக் காலின்கீழ் மிதித்து, தன்னைப் பரிசுத்தஞ்செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானாயிருப்பானென்பதை யோசித்துப்பாருங்கள்? (எபிரெயர் 10:29).

இந்த வசனத்தில், எபிரெய நிருபத்தை எழுதியவர் தேவனுடன் உடன்படிக்கையில் பரிசுத்தமாக்கப்பட்ட பிறகு கிறிஸ்துவை நிராகரிக்க முடியும் என்று குறிப்பிட்டார். மீதமுள்ள இந்த அதிகாரம் தெளிவுபடுத்துவது போல், நரகத்தில் நித்திய துயரத்தை அனுபவிப்பதுதான் இதன் கண்ணோட்டமாகும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> இயேசு சொன்னது போல், காணக்கூடிய சபையில் எப்போதும் ”கோதுமையும் களையும்” ஒன்றாக இருக்கும் என்பதை நினைவில் கொள்வது அவசியம். தேவனின் உண்மையான ஜனங்களும் உங்களிடம் இருப்பார்கள்; உண்மையான ஜனங்களைப் போலத் தோன்றுகிறவர்களும் உங்களிடம் இருப்பார்கள். இயேசுவுக்கு உண்மையுள்ள சீஷர்கள் இருந்தது போலவே, யூதாஸை போன்றவர்களும் அங்கே இருந்தார்கள். பவுலுடைய சீஷர்கள் மத்தியில் தேமாவும் இருந்தார் என்பதை நீங்கள் விரும்பினால் நினைத்துக்கொள்ளுங்கள்.
>
> – Dr. டொனால்ட் எஸ். விட்னி

காணக்கூடிய சபையின் கலவையான தன்மையின் அர்த்தம் என்னவென்றால் சபையில் அவிசுவாசம் மற்றும் தவறான போதனைக்கு எதிராக நாம் எப்போதும் கவனமாக இருக்க வேண்டும் என்பதாகும். அதே சமயத்தில், அவிசுவாசிகள் சபையின் ஊழியங்களில் ஈடுபடும்போது கூட அதன் பரிசுத்தம் பாதிக்கப்படாமல் நிலைத்திருக்கும். ஆகையால் நாம் சடங்குகளையும் தேவனுடைய பரிசுத்த சபை சடங்குகளையும் கனம் பண்ணுகிறோம். தேவனின் பரிசுத்த வார்த்தையானது பிலிப்பியர் 1:14-18 இல் பவுல் போதித்தபடி, மோசமாகவோ அல்லது போலித்தனமாகவோ போதிக்கப்பட்டாலும் நாம் அதை மதிக்கிறோம். சபையின் பரிசுத்தம் என்பது தேவனுக்கு பதிலாக சபையைப் பார்ப்பதற்கு எதிரான எச்சரிக்கையும், மனித பாவம் மற்றும் அவிசுவாசம் இருந்தபோதிலும் தேவன் சபையை திறம்பட பயன்படுத்துகிறார் என்ற உறுதியும் ஆகும்.

காணக்கூடிய சபையைப் பற்றிய இந்த புரிதலை மனதில் கொண்டு, காண முடியாத சபை என்றால் என்ன என்று கருத்தில் கொள்வோம்.

## காண முடியாத சபை

> காணக்கூடிய சபை என்பது ஞாயிற்றுக்கிழமை தோறும் உள்ளூர் சமூகத்தில், உலகம் முழுவதிலும் உள்ள விசுவாசிகளின் கூடுகையாகும், மேலும் இது விசுவாசத்தை வெளிப்படையாக அறிக்கையிட்டவர்களின் கூட்டமாகும். இவர்கள் ஞானஸ்நானம் மற்றும் கர்த்தருடைய பந்தி ஆகிய இரண்டு சடங்குகளிலும் ஒன்றாய் பங்கெடுப்பவர்கள், மேலும் அவர்கள் இதன் மூலம் தேவனுடைய காணக்கூடிய சபையின் செயல்படும் உறுப்பினர்களாக இருப்பதற்கான அறிகுறியைக் காட்டுகிறார்கள்.

– Rev. Dr. சைமன் வைபர்ட்

காணக்கூடிய சபையில் தேவனுடைய உடன்படிக்கை சமூகத்தின் ஒரு பகுதியாக இருக்கும் அனைவரும் இருக்கிறார்கள், காண முடியாத சபையில் கிறிஸ்துவோடு இரட்சிப்பில் ஐக்கியப்பட்டவர்கள் மட்டுமே இருக்கிறார்கள். இந்த காரணத்திற்காக, இது சில நேரங்களில் "உண்மையான சபை" என்று அழைக்கப்படுகிறது. காண முடியாத சபையை நாம் காணக்கூடிய சபைக்குள் இருக்கும் ஒரு சிறிய குழுவாக கருதலாம். பொதுவாக, நாம் காணக்கூடிய சபையில் உள்ள பெரும்பாலான மக்களை முழுமையாக நம்பி உண்மையிலேயே இரட்சிக்கப்பட்டவர்களாக நடத்துகிறோம். ஆனால் சங்கீதம் 44:21 மற்றும் அப்போஸ்தலர் 15:8 போன்ற வேத பகுதிகளில் நாம் பார்ப்பது போல், தேவனால் மட்டுமே இருதயத்தைப் பார்க்க முடியும் என்பதே உண்மை. இதன் விளைவாக, வரலாற்றின் இந்த கட்டத்தில், தேவனால் மட்டுமே காண முடியாத சபையை முழு உறுதியுடன் அடையாளம் காண முடியும். எல்லா காலத்திலும் பூமியில் இருக்கிற காண முடியாத சபையில் நாம் முதன்மையாக கவனம் செலுத்தப் போகிறோம் என்றாலும், காண முடியாத சபையில் கிறிஸ்துவின் பூமிக்குரிய ஊழியத்திற்கு முன்னும் பின்னும் வாழ்ந்த ஒவ்வொரு விசுவாசியும் அடங்குவதை அங்கீகரிப்பது அவசியமாகும்.

பொதுவாக, வேதாகமம் காண முடியாத சபையிடம் பேசுவதில்லை, மாறாக காணக்கூடிய சபையிடமே உரையாற்றுகிறது, ஆனால் அது பொதுவாக அதன் பார்வையாளர்கள் இரட்சிக்கப்பட்டவர்கள் என்று கருதி அவர்களிடம் பேசுகிறது. 1 கொரிந்தியர் 5, மற்றும் 1 தீமோத்தேயு 1:19-20 போன்ற சில குறிப்பிடத்தக்க வேதபகுதிகள் இதற்கு விதிவிலக்குகள் ஆகும். வெளிப்படுத்தின விசேஷம் 2–3 இல் சபைகளுக்கு எழுதப்பட்ட சில நிருபங்கள் தங்கள் பார்வையாளர்கள் எப்படிப்பட்டவர்கள் என்கிற உறுதி இல்லாமல் இருப்பதைக் காட்டுகின்றன. ஆனால் பொதுவாக, வேதத்தின் எழுத்தாளர்கள் தங்கள் வாசகர்கள் தேவனை விசுவாசிக்கவும் நம்பவும் அவருக்கு உண்மையாக கீழ்ப்படியவும் வேண்டும் என்று எதிர்பார்த்தனர். ஒவ்வொருவரும் உண்மையுள்ளவர்களாக நிரூபிக்கப்படுவதே குறிக்கோளாக இருந்தது – அதாவது காண முடியாத சபையின் ஒரு பகுதியாக காணக்கூடிய சபை இருக்க வேண்டும் என்பதே அந்த குறிக்கோளாகும்.

இயேசு மீண்டும் வரும்போது, அவர் தனது சபையை முற்றிலும் பரிசுத்தப்படுத்துவார். அவர் அதிலிருந்து அனைத்து அவிசுவாசிகளையும் களையெடுப்பார், இதனால் காண முடியாத சபை காணக்கூடிய சபைக்கு ஒத்ததாக இருக்கும். நாம் இதை மத்தேயு 7:21-23; மற்றும் 13:24-30, 1 கொரிந்தியர் 3:12-15 மற்றும் 1 பேதுரு 4:17-19 ஆகிய வேத பகுதிகளில் காணலாம். ஆனால் அந்த நேரம் வரை,



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

காண முடியாத சபையில் உள்ளவர்களின் அடையாளம் தேவனுக்கு மட்டுமே உறுதியாக தெரியும்.

காணக்கூடிய சபைக்குள் தற்போது ஒரு காண முடியாத சபை உள்ளது என்கிற உண்மை. தான் ஒரு கிறிஸ்தவன் என்று கூறிக்கொள்ளும் அனைவருக்கும் முக்கியமான தாக்கங்களைக் கொண்டுள்ளது. சபையில் சுவிசேஷம் தவறாமல் கேட்கப்பட வேண்டும் என்பது மிகப்பெரிய தாக்கங்களில் ஒன்றாகும். காணக்கூடிய சபையில் அவிசுவாசிகள் இருக்கிறார்கள் என்பது நமக்குத் தெரியும். நமது இரட்சிப்புக்கு உத்தரவாதம் அளிப்பதற்கு சபையில் உறுப்பினர்களாக இருப்பது மட்டும் போதாது என்பது இதன் அர்த்தம் ஆகும். இந்த காரணத்திற்காக, இரட்சிப்பின் சுவிசேஷத்தை நமக்கு மட்டுமல்ல, மற்றவர்களுக்கும் தொடர்ந்து பிரசங்கிக்கவும் போதிக்கவும் வேண்டும். நம் சபைகளில் உள்ள அவிசுவாசிகள் கிறிஸ்துவிடம் வரவும் காண முடியாத சபையில் ஒரு அங்கமாக இருக்கவும் அழைக்கப்படுவதை நாம் உறுதி செய்ய வேண்டும்.

சபை பரிசுத்தமானது என்பதை அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கை உறுதிப்படுத்தும் போது, சபையானது தேவனுடன் உடன்படிக்கையிலுள்ளது, அது தேவனுடைய விசேஷித்த ஜனங்களாக பிரிக்கப்பட்டுள்ளது, மேலும் அவருடைய சேவைக்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது என்பது தான் இதன் அர்த்தம் ஆகும். சபையின் இறுதி இலக்கு தார்மீக பரிசுத்தம் என்பதையும், சபையில் உள்ள விசுவாசிகளின் தற்போதைய அனுபவம் கிறிஸ்துவின் தார்மீக பரிசுத்தத்தில் அவர்களை மறைக்கிறது என்பதையும் இது குறிக்கிறது. இதற்கும் மேல், நாம் கர்த்தரின் கட்டளைகளுக்கு நம்மை அர்ப்பணிக்கும்போது, நாம் செய்யும் பாவத்திலிருந்து நாம் தொடர்ந்து சுத்திகரிக்கப்படுகிறோம், மேலும் தேவன் நமக்காக வகுத்துள்ள பரிபூரண பரிசுத்தத்தின் இலக்கை நாம் நெருங்குகிறோம்.

இப்போது நாம் சபைக்கு அதன் முக்கியத்துவத்தையும் அதிகாரத்தையும் தருகிற சபையின் தெய்வீக ஒப்புதலைப் பார்த்தோம், மேலும் சபை தேவனுக்கு பரிசுத்தமானது என்ற கருத்தில், சபை உலகளாவியது என்கிற உண்மையை நம் மூன்றாவது தலைப்பாக உரையாற்ற நாம் தயாராக இருக்கிறோம்.

# கத்தோலிக்க சபை

கத்தோலிக்க என்கிற பதம் பற்றிய நமது விவாதம் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்படும். முதலில், ”கத்தோலிக்க” என்ற வார்த்தையின் வரையறையை நாம் வழங்குவோம். இரண்டாவதாக, காணக்கூடிய சபையின் கத்தோலிக்கத்தை நாம்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

பார்ப்போம். மூன்றாவதாக, காண முடியாத சபையின் கத்தோலிக்கத்தை நாம் பார்ப்போம். முதலில், ”கத்தோலிக்க” என்ற வார்த்தையின் வரையறையை நாம் வழங்குவதிலிருந்து ஆரம்பிப்போம்.

## வரையறை

முந்தைய பாடத்தில் நாம் குறிப்பிட்டது போல, கத்தோலிக்க என்ற வார்த்தையின் அர்த்தம் உலகளாவிய என்பதாகும்; அல்லது அனைத்து சபைகளிலும் அனைத்து கிறிஸ்தவர்களையும் உள்ளடக்கியது என்பது இதன் அர்த்தமாகும். ”கத்தோலிக்க” என்ற வார்த்தை லத்தீன் வார்த்தையான *கத்தோலிகஸ்* என்கிற வார்த்தையிலிருந்து வருகிறது, இது கிரேக்க முன்மொழிவான *கட்டா* மற்றும் *ஹோலோஸ்* என்ற உரிச்சொல்லிலிருந்து உருவானது, அதாவது ”முழு” அல்லது ”முழுமையானது” என்பது இதன் அர்த்தம். இது ரோம கத்தோலிக்க சபையின் குறிப்பு அல்ல. மாறாக, இது கிறிஸ்துவை உண்மையாகப் பின்பற்றும் அனைத்து சபைகளுக்கிடையில் இருக்கும் ஒற்றுமையின் ஒரு விளக்கமாகும்.

இன்று நம்மிடம் இருக்கிற *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையின்* வடிவம் ஆரம்பகால ஞானஸ்நான விசுவாச அறிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்டது என்பதை இந்தத் தொடரின் முந்தைய பாடங்களிலிருந்து நீங்கள் நினைவில் கொள்வீர்கள். இந்த ஆரம்பகால விசுவாச அறிக்கைகள் எழுதப்பட்ட நேரத்தில், உலகெங்கிலும் உள்ள பல்வேறு கிறிஸ்தவ சபைகள் ஒரே ஒரு சபை அரசாங்கத்தின் கீழ் ஒன்றாக வரவில்லை. ஆகவே, *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கை* சபையின் உலகளாவிய தன்மையைப் பற்றி பேசும்போது, அது அனைத்து கிறிஸ்தவ சபைகளின் சங்கம் என்பதை மனதில் கொள்ளவில்லை. மாறாக, நம்மிடையே இருக்கிற ஸ்தாபன வேறுபாடுகளுக்கு மத்தியில் அனைத்து சரியான கிறிஸ்தவ சபைகளுக்கிடையில் இருக்கும் பரிசுத்த ஆவியின் ஒற்றுமையைப் பற்றி இது பேசுகிறது. வரலாற்றின் இந்த கட்டத்தில், ”கத்தோலிக்க” என்ற வார்த்தை உள்ளடக்கக் கூடிய என்கிற அர்த்தம் கொண்டதாகும். ஒவ்வொரு கிறிஸ்தவ கூடுகைக்கும் ”சபை” என்ற பெயர் இருக்க வேண்டும் என்பது இதன் நோக்கமாக இருந்தது.

இந்த யோசனை 1 கொரிந்தியர் 1:2 இல் பவுலின் போதனைக்கு ஏற்ப இருந்தது, அங்கு அவர் தனது நிருபத்தில் இவ்வாறு உரையாற்றினார்:

> கொரிந்துவிலே கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்டவர்களாயும், பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்களாயுமிருக்கிற தேவனுடைய சபைக்கும், எங்களுக்கும் தங்களுக்கும் ஆண்டவராயிருக்கிற – நம்முடைய

> கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தை எங்கும் தொழுதுகொள்ளுகிற அனைவருக்கும் எழுதுகிறதாவது … (1 கொரிந்தியர் 1:2).

இங்கே, கொரிந்துவில் உள்ள பல்வேறு கிறிஸ்தவ சபைகளை, கூட்டாக " கொரிந்துவில் … இருக்கிற சபை" என்று பவுல் குறிப்பிட்டார், அவர்கள் எங்கு வாழ்ந்தாலும் கிறிஸ்துவின் நாமத்தை தொழுதுகொண்ட அனைவரையும் உள்ளடக்கிய ஒரு பெரிய சபையின் ஒரு பகுதி இதுவாகும்.

மூன்றாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில், கார்தேஜைச் சேர்ந்த சைப்ரியன் என்பவர் சபை என்றால் என்ன என்று சொல்வதில் கண்காணிகள் அல்லது ஆசாரியர்களின் பங்கை வலியுறுத்தத் தொடங்கினார். அவரது நிருபம் 68 இல், அவர் பின்வருமாறு கூறினார்:

> ஆசாரியரிடம் ஒன்றிணைந்த ஒரு சபையாக அவர்கள் இருக்கிறார்கள் … இது கத்தோலிக்க சபையாகவும் ஒரே சபையாகவும் இருக்கிறது, வெட்டப்பட முடியாததாகவும் பிரிக்க முடியாததாகவும் இருக்கிறது, ஆனால் உண்மையில் ஒன்றோடொன்று இணைந்த ஆசாரியர்களால் இணைக்கப்பட்டு பிணைக்கப்பட்டுள்ளது.

சைப்ரியனைப் பொறுத்தவரை, சபையின் ஒற்றுமை சபை தலைவர்களின் ஒற்றுமையிலும் அதன் ஊழியத்தின் ஒற்றுமையிலும் வேரூன்றி இருந்தது. இந்த கண்ணோட்டம் வளரத் தொடங்கியதும், கிறிஸ்தவர்களும் அரசாங்கத்தின் ஒற்றுமையில் சபையின் ஒற்றுமையை உறுதிப்படுத்தத் தொடங்கினர். உலகம் முழுவதும் இருந்த சபையானது ஒரு ஒற்றை அமைப்பாக இருந்தது, ஏனென்றால் உலகம் முழுவதும் அதன் ஆசாரியர்கள் மற்றும் கண்காணிகள் இருந்தார்கள்.

இந்த கட்டத்தில் கூட, "கத்தோலிக்க" என்ற வார்த்தை, கிறிஸ்துவின் பெயரால் அழைக்கப்பட்ட மற்றும் சபையின் பாரம்பரிய கோட்பாடுகளுக்கு உண்மையாக இருந்த அனைத்து மக்களையும் சபைகளையும் உள்ளடக்கியதாக இருந்தது.

இருப்பினும், பின்னர், சபையானது பல பிரிவுகளாகத் துண்டாடப்பட்டது. உதாரணமாக, கி. பி.1054 இல் ரோம கத்தோலிக்க சபை கிழக்கத்திய பாரம்பரிய சபைகளை வெளியேற்றியது, மற்றும் கிழக்கத்திய பாரம்பரிய சபைகள் ரோம கத்தோலிக்க சபையை வெளியேற்றின.

இந்த நேரத்தில், இந்த சபைகள் "கத்தோலிக்க" என்ற வார்த்தையை புதிய பிரத்தியேக அர்த்தத்தில் பயன்படுத்தத் தொடங்கின. தங்களுடைய சபைகள் தான் கத்தோலிக்க அல்லது உலகளாவியவை என்று வலியுறுத்துவதன் மூலம், ஒவ்வொன்றும் தம்மை ஒரே செல்லுபடியாகும் சபை என்று



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அடையாளப்படுத்துவதோடு, தங்களுக்கு எதிரான சபைகளை கண்டனம் செய்வதையும் இது குறித்தது.

பின்னர், 16 ஆம் நூற்றாண்டின் சீர்திருத்தத்திற்குப் பிறகு, பெரும்பாலான புராட்டஸ்டன்ட் சபைகள் வேறுபட்ட அணுகுமுறையை எடுத்தன. அடிப்படையில், ”கத்தோலிக்க” என்ற வார்த்தையின் முந்தைய உள்ளடக்கிய அர்த்தத்தை முறையிட்டு, அவர்கள் விசுவாச அறிக்கையின் அசல் அர்த்தத்திற்குத் திரும்பினர். வேதம் மற்றும் *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கை* ஆகிய இரண்டிற்கும் இணங்க, புராட்டஸ்டன்ட் சபைகள் கிறிஸ்துவின் தலைமையின் கீழ் அனைத்து கிறிஸ்தவ சபைகளும் பகிர்ந்து கொள்ளும் ஆவியின் ஒற்றுமையை உறுதிப்படுத்தின. இந்த ஒருமைப்பாட்டை சபை அரசாங்கத்தில் வேறுபாடுகள் இருந்தும் பராமரிக்க முடியும் என்பதை அவர்கள் அங்கீகரித்தனர், அதே நேரத்தில் அவர்களின் ஒவ்வொரு சபை பிரிவினரும் அளிக்கிற நேர்மறையான பங்களிப்புகளை இழக்காமலும் பார்த்துக்கொள்ள முடியும்.

நவீன உலகில் சபையின் உலகளாவிய தன்மையை அங்கீகரிப்பது என்பது *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கையில்* உறுதிப்படுத்தப்பட்ட கோட்பாடுகளை பராமரிக்கும் ஒவ்வொரு சபையின் செல்லுபடியை உறுதிப்படுத்துவதாகும். அனைத்து உண்மையான சபைகளிலும் உள்ள அனைத்து கிறிஸ்தவர்களும் கிறிஸ்துவின் உடன்படிக்கை தலைமையின் கீழ் உள்ளனர், மேலும் அனைத்து உண்மையான விசுவாசிகளும் பரிசுத்த ஆவியின் வரங்களால் ஆசீர்வதிக்கப்படுகிறார்கள். இந்த காரணத்திற்காக, ஒவ்வொரு உண்மையுள்ள சபையிலும் ஒவ்வொரு உண்மையான கிறிஸ்தவரின் வரங்களிலிருந்து நாம் பயனடைய ஆர்வமாக இருக்க வேண்டும், மேலும் அவர்களுடன் முடிந்தவரை சேவை செய்ய நாம் தயாராக இருக்க வேண்டும்.

”கத்தோலிக்க” என்ற வார்த்தையின் வரையறையை மனதில் கொண்டு, காணக்கூடிய சபையை ”கத்தோலிக்க சபை” என்று அழைக்கக்கூடிய வழிகளைப் பார்ப்போம்.

## காணக்கூடிய உலகளாவிய சபை

உலகளாவிய தன்மையைப் பற்றிய நமது புரிதலை நாம் காணக்கூடிய சபையைப் பற்றிய புரிதலுடன் இணைக்கும்போது, நாம் காணக்கூடிய சபையை கிறிஸ்துவின் தலைமையின் கீழ் தேவனுடன் உடன்படிக்கையில் உள்ள அனைத்து மக்களின் உலகளாவிய ஐக்கியமாகும் என்று வரையறுக்க முடியும். தெளிவாகப் பார்க்கும்போது, இந்த ஐக்கியமானது சபை அரசாங்கத்தினால் ஆனது அல்ல, மாறாக ஆவியினால் ஆனது ஆகும். அனைத்து கிறிஸ்தவ சபைகளின் மீதும் தன் அரசாங்கத்தை விரிவுபடுத்தக்கூடிய ஒரு பிரிவு இல்லை. மாறாக,



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஒவ்வொரு சபையும் ஒரே தேவனுடன் உடன்படிக்கையில் உள்ளது, மற்றும் ஒரே கிறிஸ்துவின் உடன்படிக்கை தலைமையின் கீழ் உள்ளது என்பதன் அடிப்படையில் காணக்கூடிய சபையின் ஒருமைப்பாடு உள்ளது.

வரலாற்று ரீதியாகப் பார்க்கும்போது, காணக்கூடிய சபை அதன் உலகளாவிய தன்மையை பல்வேறு வழிகளில் கண்டறிந்துள்ளது. சில மரபுகளில், இது சபை அரசாங்கத்தின் மூலம் கண்டறியப்பட்டது. சபையானது தன்னைப் பெருக்கிக்கொண்டே விரிவடைகிறது, ஒவ்வொரு புதிய ஊழியரும் நியமிக்கப்பட்டு, ஏற்கனவே ஊழியர்களாக இருந்தவர்களால் அவர் மீது கை வைக்கப்பட்டு இது நடைபெறுகிறது.

ஆனால் பொதுவாக, முழு சபையின் ஒற்றுமையானது ஊழியர்கள் மற்றும் ஆசாரியர்கள் வாரிசு வாரியாக நியமிக்கப்படுதலில் இல்லாமல், கிறிஸ்துவிலும் ஆவியின் வேலையிலும் நாம் வைக்கும் விசுவாசத்தில் தான் இருக்கிறது என்பதை புராட்டஸ்டண்டுகள் வலியுறுத்தியுள்ளனர். இந்த காரணத்திற்காக, ஆவியின் ஒருமைப்பாடு இருக்கும் இடங்களிலும், தேவனுடன் உடன்படிக்கையில் இருப்பவர்கள் கிறிஸ்துவின் நாமத்தில் கூடும் இடங்களிலும் புதிய சபைகள் எழும்பும். புராட்டஸ்டண்டுகள் காணக்கூடிய சபை கத்தோலிக்க சபை என்று வலியுறுத்துகின்றனர், ஏனென்றால் மக்கள் தேவனுடன் உடன்படிக்கையிலும், கிறிஸ்துவின் தலைமையிலும், ஆவியின் ஒருமைப்பாட்டிலும் எங்கும் இருப்பதால் அப்படி கூறுகின்றனர்.

கிறிஸ்துவின் உலகளாவிய சபையின் ஒரு பகுதியாக அவர்கள் எந்த சபைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதை அறிந்து கொள்வது இன்று பல கிறிஸ்தவர்கள் எதிர்கொள்ளும் பொதுவான பிரச்சனைகளில் ஒன்றாகும். உலகின் பெரும்பாலான பகுதிகளில், பல வகையான சபைகள் உள்ளன, அவை கிறிஸ்தவ சபைகள் என்று கூறுகின்றன, பல நல்ல கிறிஸ்தவர்கள் பெரும்பாலும் இந்த இரண்டு உச்சநிலைகளில் ஒன்றுக்கு செல்கிறார்கள். அவர்கள் தங்கள் கைகளை மிகவும் பரவலாகத் திறந்து, கிறிஸ்தவ சபையாகக் கூறிக்கொள்ளும் எந்தவொரு சபையையும் தழுவிக்கொள்கிறார்கள், அல்லது அவர்களின் குறுகிய வரையறுக்கப்பட்ட சபையை அல்லது பிரிவைத் தவிர மற்ற அனைத்தையும் விலக்குகிறார்கள்.

இந்த சிரமத்திற்கான ஒரு பயனுள்ள தீர்வை சபையின் மூன்று பாரம்பரிய அடையாளங்களில் காணலாம். இந்த அடையாளங்கள் 16ஆம்நூற்றாண்டில் ஸ்காட்லாந்தில் வாழ்ந்த ஜான் நாக்ஸால் வகுக்கப்பட்டது, ஆனால் அவை அவருடைய காலத்தில் பல புராட்டஸ்டண்டு சபைகளின் சிந்தனையை பிரதிநிதித்துவப்படுத்தின. அடிப்படையில், உலகளாவிய சபையின் உண்மையான சபைகளை கள்ள சபைகளிடமிருந்து வேறுபடுத்த கிறிஸ்தவர்களுக்கு இந்த அடையாளங்கள் உதவுகின்றன.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> சபை எங்கே இருக்கிறது என்பதைக் கண்டுபிடிக்க சபையின் அடையாளங்கள் முற்றிலும் அவசியமானவை, ஏனென்றால் உண்மையில், எதுவும் தன்னை ஒரு சபை என்று அழைக்க முடியும். 16 ஆம் நூற்றாண்டின் சீர்திருத்தம் போன்ற பெரும் இறையியல் நெருக்கடிகளில், "உண்மையான சபை எங்கே காணப்படுகிறது?" என்கிற கேள்வி எழுகிறது. உதாரணமாக, சீர்திருத்தவாதிகள், சபையின் அடையாளங்களை மிகவும் கவனமாக வரையறுத்து, "இது சபைக்கு வெளியில் இருக்கும் சபையின் பெயர் அல்ல. இது கட்டிடத்தின் கட்டிடக்கலை அல்ல. முதலில் தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கித்தல் இருக்கிறதா இல்லையா என்பதைப் பற்றியது" என்றார்கள். தேவனுடைய வார்த்தையின் சரியான பிரசங்கம் எங்கிருந்தாலும், அங்கே ஒரு சபை இருக்கிறது. சபையின் கட்டளைகள், சடங்குகள் எங்கு சரியாக நிர்வகிக்கப்படுகிறதோ அங்கு சபை உள்ளது. பிந்தைய மதிப்பெண்கள், குறிப்பாக, சபையின் ஒழுக்கம் ஆகும் – ஒழுக்கத்தின் அடையாளம் இல்லாமல் சபையில் பரிசுத்தம் இருக்க முடியாது, இதனால் சபையானது அதன் நேர்மை மற்றும் அடையாளத்தின் அடிப்படையில் சரணடைந்து விடும்.
>
> Dr. ஆர். ஆல்பர்ட் மோஹ்லர், Jr.

தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கிப்பதில் தொடங்கி, காணக்கூடிய உலகளாவிய சபையின் மூன்று பாரம்பரிய அடையாளங்களைப் பார்ப்போம்.

தேவனுடைய வார்த்தையின் உடைமை, விளக்கம், விண்ணப்பம் அல்லது பிரகடனம் ஆகியவற்றிற்கு பிரத்யேக உரிமை கொண்ட சபையோ அல்லது பிரிவோ இல்லை. சில சபைகள் மற்றும் பிரிவுகள் வேதத்தை விளக்குவதற்கும் போதிப்பதற்கும் தனி உரிமை இருப்பதாகக் கூறுகின்றன. சிலர் மற்றவர்களை விட வேதாகமத்தை சரியாகப் புரிந்து கொள்கிற விசேஷ ஞானம் தங்களுக்கு இருப்பதாகக் கூறுகிறார்கள். ஆனால் எந்த சபையும் வார்த்தையின் பிரசங்கம் உட்பட எந்த அடையாளங்களையும் சரியாக வெளிப்படுத்துவதில்லை. காணக்கூடிய முழு சபைக்கும் தேவன் வேதாகமத்தைக் கொடுத்திருக்கிறார். மேலும், வேதாகமத்தைப் புரிந்துகொள்ள உதவுவதற்காக அவர் முழு சபைக்கும் தனது பரிசுத்த ஆவியைக் கொடுத்தார். 1 தீமோத்தேயு 3:15, மற்றும் எபிரெயர் 4:11-13 மற்றும் 6:4-6 போன்ற வேத பகுதிகளில் இந்த விஷயங்களைக் காண்கிறோம். மேலும், மத்தேயு 28:20, 1 தீமோத்தேயு 4:17, மற்றும் 2 தீமோத்தேயு 2:15 மற்றும் 3:14-17



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஆகியவற்றில் நாம் காண்கிறபடி, தேவனுடைய வார்த்தையைப் படிக்கவும், புரிந்துகொள்ளவும், போதிக்கவும் வேதாகமம் அறிவுறுத்துகிறது.

சபையின் இரண்டாவது அடையாளம் ஞானஸ்நானம் மற்றும் கர்த்தருடைய பந்தியின் சரியான நிர்வாகம் ஆகும். இந்த சடங்குகள் முழுக்க முழுக்கத் காணக்கூடிய சபையைச் சேர்ந்தவை, அவை ஒரு பிரிவினருக்கு அல்லது இன்னொரு பிரிவினருக்கு மட்டுமானதல்ல.

வேதாகமத்தின்படி சடங்குகளை நிர்வகிப்பது காணக்கூடிய சபையில் உள்ள ஒவ்வொரு சபையின் பாக்கியமும் பொறுப்பும் ஆகும். மத்தேயு 28:19 இல் ஞானஸ்நானம் பெறுவதற்கான மகா கட்டளையிலும், 1 கொரிந்தியர் 1:13-17 இல் ஞானஸ்நானம் பற்றிய பவுலின் போதனையிலும் இதை நாம் பார்க்கிறோம். லூக்கா 22:15-20 இல் இயேசு கர்த்தருடைய பந்தியை தொடங்கி வைத்ததிலும் நாம் காண்கிறோம், அங்கு தேவன் தனது உடன்படிக்கை தலைமையின் கீழ் சேர்க்கப்பட்ட அனைவரும், அவருடைய ராஜ்யத்திலுள்ள அனைவரும் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறலாம் என்று குறிப்பிட்டார். பெரும்பாலான புராட்டஸ்டண்டு சபைகள் மற்ற சபைகள் மற்றும் பிரிவுகளின் சடங்குகளை அங்கீகரிப்பதற்கும் உறுதிப்படுத்துவதற்கும் இது போன்ற வேத பகுதிகளே காரணம்.

காணக்கூடிய உலகளாவிய சபையின் மூன்றாவது பாரம்பரிய அடையாளம், ஒழுங்கில்லாதவர்களை வெளியேற்றுதல் போன்ற முறையான சபை ஒழுக்கம் ஆகும்.

எந்த கிறிஸ்தவனும் முறையான சபை ஒழுங்கு நடவடிக்கையை, குறிப்பாக ஒழுங்கு நடவடிக்கையால் சபையை விட்டு வெளியேற்றப்படுவதை விரும்புவதில்லை. இது பெரும்பாலும் சபைகள் முறையான ஒழுங்கு நடவடிக்கையைப் பயன்படுத்துவதைத் தவிர்க்க வழிவகுத்தது. மத்தேயு 13:24-30 இல் காணப்படும் கோதுமை மற்றும் களைகளின் உவமையில் நாம் காணக்கூடியது போல, சகிப்புத்தன்மைக்கு வேதாகம உத்தரவாதமும் உள்ளது.

அப்படியிருந்தும், ஒழுக்கத்திற்கு அதன் இடம் உண்டு. ஒரு நபரின் பாவம் மிகவும் தொந்தரவாக இருக்கும் நேரங்கள் உள்ளன, – குறிப்பாக அது சபைக்கும் அதன் நற்பெயருக்கும் களங்கத்தை விளைவிக்கும் போது அது ஒழுங்குபடுத்துதலின் மூலம் தீர்க்கப்பட வேண்டும். இது போன்ற சமயங்களில், சபையைப் பாதுகாப்பதும் தவறு செய்தவரை மனந்திரும்புதலுக்கு தூண்டுவதும் ஒழுங்குபடுத்துதலின் நோக்கமாகும். மத்தேயு 16:19 மற்றும் 18:18, யோவான் 20:23 மற்றும் தீத்து 3:10 போன்ற பகுதிகளில் முறையான ஒழுக்கத்திற்கான வேத ஆதாரங்களைக் காணலாம். மேலும் இது 1 கொரிந்தியர் 5:1-13 போன்ற பகுதிகளில் நடைமுறையில் இருப்பதைப் பார்க்கிறோம். காணக்கூடிய முழு சபையும் கிறிஸ்துவுக்கு சொந்தமானதாகவும் பூமியில் அவரை

பிரதிநிதித்துவப்படுத்துவதாகவும் இருக்கிற காரணத்தால், காணக்கூடிய சபையின் ஒவ்வொரு பகுதியும் கிறிஸ்துவின் மக்களைப் பாதுகாப்பதும் சபை ஒழுங்கை சரியாக நடைமுறைப்படுத்துவதன் மூலம் அவருக்கு கொடுக்க வேண்டிய கனத்தை கொடுப்பதும் முக்கியம்.

சபையின் அடையாளங்களை இன்றும் நாம் கருத்தில் கொள்வது முக்கியம். கிறிஸ்துவின் தலைமையின் கீழ் தேவனுடன் உடன்படிக்கையில் நம்முடைய சபைகள் காணக்கூடிய உலகளாவிய சபையின் வரம்புக்குள் இருப்பதை உறுதி செய்ய அவை நமக்கு உதவுகின்றன. சபையின் வஞ்சகர்களையும் எதிரிகளையும் அடையாளம் காண அவை உதவுகின்றன, இதனால் கிறிஸ்தவர்களை இதுபோன்ற குழுக்களிடமிருந்து விலகியிருக்க எச்சரிக்கலாம், மேலும் இந்த பொய்யான குழுக்கள் நம் தேவனையும் அவருடைய சுவிசேஷத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தவில்லை என்பதை உலகுக்கு அறிவிக்க முடியும். நாம் ஊழியத்தில் ஈடுபடும்போது, அவைகள் சபை பிரிவுகளுக்கு அப்பால் வேலை செய்ய நம்மை ஊக்குவிக்க முடியும். கிறிஸ்துவின் சரீரம் நமது சபைகள் அல்லது சபைப்பிரிவுகளுக்கு மட்டுமானதல்ல, ஆனால் உலகம் முழுவதும் கிறிஸ்துவின் சுவிசேஷம் அறிவிக்கப்படும் இடமெல்லாம் பரந்திருக்கிறது என்பதை நாம் அங்கீகரிக்கும் போது, நாம் காணக்கூடிய சபையின் ஒரு பகுதியாக இருக்கும் அனைவரையும் அரவணைக்க ஊக்குவிக்கப்பட முடியும்.

இப்போது நாம் காணக்கூடிய சபையின் உலகளாவிய தன்மையைப் பார்த்திருக்கிறோம், காண முடியாத சபையும் உலகளாவியது தான் என்பதற்கான சில வழிகளைப் பார்ப்போம்.

## காண முடியாத உலகளாவிய சபை

காண முடியாத சபையைப் பற்றிய நமது புரிதலுடன் கத்தோலிக்கத்தைப் பற்றிய நமது புரிதலை நாம் இணைக்கும்போது, காண முடியாத கத்தோலிக்க சபையை இரட்சிப்புக்காக கிறிஸ்துவுடன் ஒன்றிணைந்திருக்கிற எல்லா காலத்திலும் இருக்கிற மக்கள் என்று நாம் இவ்வாறு வரையறுக்கலாம். நாம் கூறியது போல், காண முடியாத சபை காணக்கூடிய சபையின் உட்பிரிவாகும், எனவே கண்ணுக்கு தெரியாத சபையில் உள்ள அனைவரும் கிறிஸ்துவின் தலைமையின் கீழ் தேவனுடன் உடன்படிக்கையில் இருக்கிறார்கள் என்பதும் உண்மை. ஆனால் காண முடியாத சபையை வேறுபடுத்திக்காட்டுவதற்காக, நமது வரையறையானது அது காணக்கூடிய சபையிலிருந்து எவ்வாறு வேறுபடுகிறது என்பதில் மட்டுமே கவனம் செலுத்துகிறது.

காண முடியாத சபையின் உலகளாவிய தன்மையைப் பற்றி சிந்திக்க பல வழிகள் இருந்தாலும், நாம் இரண்டில் மட்டுமே கவனம் செலுத்துவோம். முதலில்,



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

காண முடியாத சபை உலகளாவியது என்பதற்கான காரணம் ஒரே ஒரு இரட்சகர் தான் இருக்கிறார் என்பதாகும். இரண்டாவதாக, காண முடியாத சபை உலகளாவியது என்பதற்கான காரணம் அந்த இரட்சகரிடம் நம்மை வழிநடத்தக்கூடிய ஒரே ஒரு உண்மையான மார்க்கம் மட்டுமே உள்ளது என்பதாகும். ஒரே ஒரு இரட்சகர் மட்டுமே இருக்கிறார் என்ற கருத்தை முதலில் பார்ப்போம்.

## ஒரே இரட்சகர்

இயேசு கிறிஸ்து மட்டுமே மனிதகுலத்திற்கு இருக்கும் ஒரே இரட்சகர் என்று வேதம் தெளிவாக போதிக்கிறது. அவர் மட்டுமே நம்மை இரட்சிப்பதற்கு வல்லமை படைத்திருந்தார், மற்றும் அவர் ஒருவர்தான் நம்மை இரட்சிப்பார். அப்போஸ்தலருடைய நடபடிகள் 4:12 இல் பேதுரு வலியுறுத்தியதைப் போல:

> அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை (அப்போஸ்தலருடைய நடபடிகள் 4:12).

இயேசு கிறிஸ்து எப்போதும் மனிதர்களுக்காக இருக்கிற ஒரே இரட்சகர் ஆவார். இந்த வார்த்தைகளை யோவான் 14:6 இல் பேசியபோது, நம்முடைய கர்த்தர் தாமே இந்த உண்மையை அறிவித்தார்:

> நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான் (யோவான் 14:6)

> ஏன் இயேசு ஒருவரால் மட்டுமே நம்மை இரட்சிக்க முடியும்? இரட்சகர் பூரணமான மனிதராகவும், பூரணமான தேவனாகவும் இருக்க வேண்டும், மேலும் இயேசு நம் இடத்தில் நிற்பதற்கும், நமக்காக பலியாவதற்கும், நமக்கு மாற்றாக இருக்கவும், ஒரு பூரணமான மனிதராக இருக்கவும் வேண்டும். அந்த பாத்திரத்தை இயேசுவால் மட்டுமே நிறைவேற்ற முடியும். மேலும், நிச்சயமாக, தேவன் தாவீதின் சிங்கத்தை தேவனுடைய மேசியாவாகவும் அபிஷேகம் செய்யப்பட்டவராகவும் நியமித்தபோது, மீட்பின் வரலாற்றிற்காக இது ஆயத்தமாக்கப்பட்டது. தாவீதுக்குப் பிறகு வரப்போகும் பெரிய ராஜா இயேசு ஆவார், இயேசு இந்த அலுவலை வகிக்கிறார், ஆகவே முழு பழைய ஏற்பாடும் இயேசுவின் வருகைக்கு நம்மை தயார்படுத்துகிறது. ஆகவே,



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

தனது ஜனங்களை பாவத்திலிருந்து முற்றிலும் இரட்சிப்பதற்கான தகுதி இயேசுவுக்கு மட்டுமே இருக்கிறது.

Dr. ஜான் எம். ஃபிரேம்

இயேசு பிரஸ்பிட்டேரியன் சபைக்கும் பாப்டிஸ்டு சபைக்கும் ஆங்கிலிகன் சபைக்கும் மெத்தடிஸ்டு சபைக்கும் லுத்தரன் சபைக்கும் ரோமன் கத்தோலிக்க சபைக்கும் கிழக்கத்திய பாரம்பரிய சபைக்கும் மற்றும் காணக்கூடிய சபையின் ஒவ்வொரு சபைப் பிரிவினருக்கும் மீட்பர் ஆவார். ஒரே ஒரு காண முடியாத சபை மட்டுமே உள்ளது, ஏனென்றால் இரட்சிக்கப்பட்ட அனைவரும் ஒரே கிறிஸ்துவோடும் ஒரே இரட்சகரோடும் ஒன்றிணைக்கப்பட்டுள்ளனர். அவர்தான் நம் ஒருமைப்பாட்டின் ஆதாரமாக இருக்கிறார். அவரே பிரிக்கப்படாதவராகையால், நாமும் அப்படித்தான் இருக்கிறோம்.

காண முடியாத சபை உலகளாவியது என்ற உண்மையுடன் தொடர்புடைய இரண்டாவது கருத்து என்னவென்றால், ஒரே ஒரு உண்மையான மார்க்கம் மட்டுமே கிறிஸ்துவிடம் நம்மை வழிநடத்த முடியும் என்பதாகும்.

## ஒரு மதம்

கிறிஸ்தவம் என்பது முதன்மையாக இரட்சிப்பின் ஒரு அமைப்பு அல்ல, மாறாக தேவனுடனான ஒரு உடன்படிக்கை உறவு என்பதை உணர்ந்து கொள்வது அவசியம். அதாவது, மற்ற மதங்களைப் போலல்லாமல், கிறிஸ்தவம் அடிப்படையில் இரட்சிப்பைப் பெறுவதற்கான ஒரு வழிமுறை அல்ல. மாறாக, இது தேவனுக்கும் அவருடைய ஜனங்களுக்கும் இடையிலான உறவாகும். ஆம், தேவனோடு சரியான உறவில் நம்மை ஈடுபடுத்துவதற்கான ஒரு வழிமுறையாக விசுவாசம் முக்கியமானதாக இருக்கிறது. ஆனால் பெரிய கேள்வி என்னவென்றால்: நீங்கள் தேவனின் முன் நிற்கும்போது உங்கள் அடையாளம் என்ன? நீங்கள் தேவனுடைய ராஜ்யத்தில் உண்மையுள்ள குடிமகனா? தேவன் உங்களைப் பார்க்கும்போது, கிறிஸ்துவின் உடன்படிக்கை இரத்தத்தில் மறைந்திருக்கும் ஒருவரை அவர் பார்க்கிறாரா? அல்லது நீங்கள் அவருடைய எதிரிகளின் ராஜ்யத்தின் குடிமகனா? நீங்கள் உங்கள் சொந்த தகுதியின் அடிப்படையில் தேவனுக்கு முன்பாக நிற்கிறீர்களா, அப்படியானால் உங்கள் பாவத்திற்கான கிரையத்தை யார் செலுத்த வேண்டும்?

வருத்தப்படும் விதமாக, தவறான மதங்களில் உள்ளவர்கள் எதிரி ராஜ்யங்களின் உறுப்பினர்கள் ஆவார்கள். அவர்கள் தேவனுடைய உடன்படிக்கை ஜனங்களில் உட்படவில்லை, ஆகவே அவர்கள் கிறிஸ்துவுக்கு சொந்தமானவர்கள் அல்ல. இரட்சகரிடம் செல்ல கிறிஸ்தவ மதம் மட்டுமே நமக்கு வாய்ப்பளிக்கிறது.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இதனால்தான் வேதாகம கிறிஸ்தவம் அந்த மக்கள் அல்லது மதங்கள் நல்ல நோக்கங்களைக் கொண்டதாகத் தோன்றினாலும், மற்ற மதங்களின் மூலம் மக்கள் இரட்சிக்கப்பட முடியும் என்பதை மறுக்கிறது.

> நமக்குத் தெரிந்தபடி, கிறிஸ்தவமல்லாத பல மதங்கள் உள்ளன, அவை சில நேரங்களில் ”உலகின் பெரிய மதங்கள்” என்று அழைக்கப்படுகின்றன, ஏனெனில் அவற்றை அதிக மக்கள் பின்பற்றுகிற காரணத்தினாலும் அவைகளின் செல்வாக்கின் காரணத்தினாலும் அவ்வாறு அழைக்கப்படுகின்றன. கிறிஸ்தவர் அல்லாத ஒரு நபர், ஆனால் அவர் உலகின் மற்ற பெரிய மதங்களில் ஒன்றில் உண்மையாக ஈடுபடுகிறார், அதில் அவர் உண்மையுள்ளவராக இருக்கிறார், அந்த குறிப்பிட்ட மதத்தின் கோட்பாடுகள் மற்றும் நடைமுறைகளைப் பின்பற்றுபவராக இருந்து நடைமுறையில், அவர் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாமல் இருக்கிறார் அவர் பரலோகம் செல்வாரா – ஒருவேளை அவர் கிறிஸ்துவைப் பற்றி கேள்விப்பட்டிருக்கக் கூட மாட்டார். இந்த கேள்வி அடிக்கடி கேட்கப்படுகிறது. வேதம் அதைக்குறித்து தெளிவாக இருக்கிறது. யோவான் 14:6 இல், இந்த குறிப்பிட்ட சூழ்நிலையைக் கையாள்வதில் இயேசு தெளிவாக இருந்தார். அவர் தன்னைப் பற்றி, “நானே வழி; நானே சத்தியம்; நானே ஜீவன்” என்றார். அது போதுமான அளவு தெளிவாக இல்லை என்றால், ”என்னாலேயன்றி பிதாவிடம் ஒருவனும் வரமாட்டான்” என்று அவர் மேலும் கூறுகிறார்.
>
> Dr. டொனால்ட் எஸ். விட்னி

> தேவனுடைய பொதுவான கிருபையின் காரணமாக மக்கள் எந்த மதத்தைப் பின்பற்றினாலும் அவர்கள் வாழ்க்கையில் எல்லா வகையான நன்மைகளும் இருக்கிறதைப் பார்க்கிறோம். ஆனால் மக்களின் வாழ்வில் பெரும் தீமைகள் இருப்பதையும் நாம் காண்கிறோம், தேவனுடைய பரிசுத்தத்தையும் மனிதர்கள் பாவத்தால் வீழ்ந்த நிலையையும் நாம் உணர்ந்தால், தேவனுக்கு முன்பாக வருவதற்கும் அவருடன் உறவு கொள்வதற்கும் வெறுமனே நெறிமுறை நடத்தை மட்டும் போதாது என்பதை உணர முடியும். நம்முடைய பாவ நிலையில் தேவனுக்குப் பிரியமான எதையும் நாம் ஒருபோதும் செய்ய முடியாது. ஆகவே நமக்கு மத நடைமுறை மட்டுமல்ல, ஒரு மீட்பரும் இரட்சகரும்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> தேவை. தேவனுடன் மீண்டும் உறவை ஏற்படுத்த அந்த வழியை நமக்கு வழங்கியவர் இயேசு மட்டுமே.
>
> Dr. கே. எரிக் தோனேஸ்

நாம் சொன்னது போல், காண முடியாத சபையில் வாழும் உறுப்பினர்கள் பொதுவாக காணக்கூடிய சபைக்குள் அடங்குவர். இந்த காரணத்திற்காக, பல இறையியலாளர்கள் *காணக்கூடிய* சபைக்கு வெளியே இருப்பவர்களுக்கு இரட்சிப்பு பொதுவாக சாத்தியமில்லை என்று கூறியுள்ளனர். அதாவது, ஒரு நபர் காணக்கூடிய சபையின் ஒரு அங்கமாக இல்லாவிட்டால், அந்த நபர் இரட்சிக்கப்பட சாதாரணமாக வாய்ப்பு இல்லை.

கி. பி. 200 முதல் 258 வரை வாழ்ந்த ஆரம்பகால சபை பிதாவான சைப்ரியன், *ஆன் த யூனிட்டி ஆப் த சர்ச்* என்கிற தனது கட்டுரையில் இவ்வாறு எழுதினார்:

> சபையிலிருந்து பிரிந்து ஒரு கள்ள சபையிடம் சேர்ந்தவன், சபையின் வாக்குத்தத்தங்களிலிருந்து பிரிக்கப்படுகிறான்; கிறிஸ்துவின் சபையை விலக்குகிறவன் கிறிஸ்துவின் வெகுமதிகளை அடைய முடியாது. அவன் ஒரு அந்நியன்; அவன் ஒரு அவதூறு உண்டாக்குகிறவன்; அவன் ஒரு எதிரி. அவனுக்கு தேவன் தகப்பனாக இருக்க முடியாது, அவனுக்கு சபையும் தாயாக இருக்க முடியாது.

இங்கே, சைப்ரியன் காணக்கூடிய சபையை விட்டு வெளியேறியவர்களுக்கு எதிராக வாதிட்டார். நீங்களும் காணக்கூடிய சபையின் ஒரு அங்கமாக இல்லாவிட்டால் கிறிஸ்துவின் வெகுமதிகளைப் பெற நீங்கள் காண முடியாத சபைக்குள் நுழைய முடியாது என்பதே அவரது கருத்து. இந்த வாதம் காணக்கூடிய சபை தேவனுடன் உடன்படிக்கையில் இருப்பதைப் பற்றி நாம் கூறியதோடு ஒத்துப்போகிறது.

இரட்சிப்பு என்பது தேவனுடைய உடன்படிக்கையின் ஆசீர்வாதம் என்பதே உண்மை. எரேமியா 31:31-34, லூக்கா 1:69-75, ரோமர் 11:27, எபிரெயர் 7:22-25 மற்றும் பல இடங்களில் இதை நாம் பார்க்கிறோம். ஒரு உதாரணத்திற்காக, அவர் கர்த்தருடைய பந்தியை ஆரம்பித்த போது லூக்கா 22:20 இல் இயேசு கூறிய வார்த்தைகளைக் கவனியுங்கள்:

> இந்தப் பாத்திரம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது (லூக்கா 22:20).

கைதுசெய்யப்பட்ட இரவில், இயேசு நம் பாவங்களுக்காக பரிகாரமாக சிந்தும் இரத்தம் உடன்படிக்கையாக இருக்கும் என்று கூறினார். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், கிறிஸ்துவின் இரத்தத்தினாலான இரட்சிப்பு அவருடைய உடன்படிக்கையின் மூலம் மட்டுமே வருகிறது.

தேவனுடைய உடன்படிக்கை காணக்கூடிய சபையுடன் செய்யப்பட்டதால், இரட்சிப்பு பொதுவாக காணக்கூடிய சபையின் மூலமே வருகிறது. காணக்கூடிய சபைக்குள் இருக்கிற மக்கள் விசுவாசத்தின் மூலம் இரட்சிப்புக்குள் வரும்போது அல்லது சுவிசேஷத்தின் மூலம் மக்கள் மனந்திரும்பி காணக்கூடிய சபைக்கு வரும்போது இது நிகழ்கிறது. நிச்சயமாக, சில நேரங்களில் மக்கள் சபையுடனான எந்த வித தொடர்புமின்றியே இரட்சிக்கபடுகிறார்கள். ஆனால் இது நிகழும்போது, வழக்கத்திற்கு மாறான – அதாவது அசாதாரணமான ஒன்று நடைபெறுகிறது என்பதை அங்கீகரிப்பது முக்கியம்.

காண முடியாத சபை உலகளாவியது என்பதால், தேவனுடைய உடன்படிக்கைக்கு உண்மையாயிருப்பவர்கள் மட்டுமே இரட்சிக்கப்பட முடியும். மற்ற மதங்களில் உள்ள மக்கள் தங்கள் சொந்த மதங்களின் தரத்தின் அடிப்படையில் நல்லவர்களாக இருப்பதன் மூலம் பரலோகத்திற்குச் செல்வார்கள் என்ற நம்பிக்கை இல்லை. நாம் சுவிசேஷம் உரைத்தே ஆக வேண்டும். ஒரே இரட்சகரைப் பற்றி நாம் மக்களுக்குச் சொல்ல வேண்டும். நாம் அவர்களை தேவனின் பூமிக்குரிய ராஜ்யமாகிய ஒரே உடன்படிக்கை சமூகத்திற்குள் கொண்டுவர வேண்டும், அதன் கர்த்தர் மற்றும் ராஜாவை நேசிக்கவும் அவருக்கு கீழ்ப்படியவும் அவர்களுக்கு போதிக்க வேண்டும். காண முடியாத சபையின் உலகளாவிய தன்மை இரட்சிக்கப்பட்ட நம் அனைவருக்கும் ஒரு பெரிய ஊக்கமாகும் – இது கிறிஸ்துவில் நம் ஒற்றுமையாகும். ஆனால் இன்னும் கிறிஸ்துவிடம் வராத அனைவருக்கும் இது ஒரு பயங்கரமான எச்சரிக்கையாகும்.

சபையைப் பற்றிய நம் பாடத்தில், சபையின் தெய்வீக ஒப்புதலைப் பற்றிப் பார்த்தோம், சபை பரிசுத்தமானது மற்றும் உலகளாவியது என்பதை நாம் பார்த்தோம். இந்த கட்டத்தில், நம் கடைசி முக்கிய தலைப்பான சபை பரிசுத்தவான்களின் ஐக்கியம் என்பதைப் பார்க்க நாம் தயாராக இருக்கிறோம்.

# ஐக்கியம்

"பரிசுத்த" என்ற வார்த்தையைப் பற்றிய நம் கலந்துரையாடலில், பரிசுத்தவான்கள் என்ற சொல் காணக்கூடிய சபையில் உள்ள அனைவரையும் பொதுவாக குறிக்கிறது, மேலும் காண முடியாத சபையில் உள்ள அனைவரையும்

ஒரு விசேஷித்த விதத்தில் குறிக்கிறது என்று நாம் பார்த்தோம். ஆகவே, பரிசுத்தவான்களின் ஐக்கியத்தைப் பற்றி நாம் விவாதிக்கும்போது, நாம் இன்னும் ஆராயாத ஐக்கியம் என்கிற பதத்தின் மீது நம் கவனத்தை செலுத்துவோம்.

*அப்போஸ்தல விசுவாசப் பிரமாணத்தின்* பண்டைய கிரேக்க பதிப்புகளில், ஐக்கியம் என்பதைக் குறிக்கும் சொல் *கொயினோனியா* (κοινωνία) ஆகும். சபையின் உறுப்பினர்களுக்கிடையில், குறிப்பாக தேவனோடு அவர்கள் இணைந்திருப்பதன் மூலம் இருக்கும் கூட்டுறவைக் குறிக்க வேதம் பொதுவாக இந்த வார்த்தையைப் பயன்படுத்துகிறது. அப்போஸ்தலருடைய நடபடிகள் 2:42, 2 கொரிந்தியர் 13:14 மற்றும் 1 யோவான் 1:3 போன்ற வேத பகுதிகளில் இதை நாம் பார்க்கிறோம்.

பெரும்பாலும் பொருட்கள் மற்றும் பணம் போன்றவற்றை பகிர்ந்தளித்தலைக் குறிப்பதற்கு புதிய ஏற்பாடு *கொயினோனியா* (κοινωνία) என்கிற வார்த்தையைப் பயன்படுத்துகிறது. ரோமர் 15:16, 2 கொரிந்தியர் 9:13, மற்றும் எபிரெயர் 13:16 ஆகிய வேத பகுதிகளில் இதை நாம் பார்க்கிறோம். சுவிசேஷத்தைப் பரப்புவதை விவரிக்கவும் இது பயன்படுத்தப்படுகிறது – முதன்மையாக இது சுவிசேஷம் உரைத்தல் ஊழியத்தில் சுவிசேஷம் பரப்புவதை அல்ல, ஆனால் பிலிப்பியர் 1:5 மற்றும் பிலேமோன் வசனம் 6 இல் உள்ளதைப் போல சபைக்குள் பரஸ்பர வழியில் சுவிசேஷம் பகிர்வதைக் குறிக்கிறது.

இந்த கருத்துகளுக்கு ஏற்ப, விசுவாச அறிக்கையில் உள்ள ”ஐக்கியம்” என்ற வார்த்தை பாரம்பரியமாக சபை உறுப்பினர்களுக்கிடையேயான கூட்டுறவைக் குறிக்கவும், நம் பொருட்களை மற்றவர்களுக்கு பகிர்ந்து கொடுப்பதை குறிப்பதற்கும் மற்றும் நம்முடன் பகிர்ந்துகொள்பவர்கள் மீது நாம் சார்ந்திருப்பதைக் குறிப்பதற்கும் இது பயன்படுத்தப்பட்டது.

பரிசுத்தவான்களின் ஐக்கியத்தைப் பற்றி நாம் ஆராயும்போது, இப்போது தெரிந்திருக்க வேண்டிய ஒரு வித்தியாசத்தைச் சுற்றி நம்முடைய விவாதத்தை அமைப்போம். முதலில், காணக்கூடிய சபைக்குள் இருக்கும் ஐக்கியத்தைப் பார்ப்போம். இரண்டாவது, காண முடியாத சபைக்குள் இருக்கும் ஐக்கியத்தைப் பற்றி பார்ப்போம். காணக்கூடிய சபையில் இருக்கிற பரிசுத்தவான்களின் ஐக்கியத்தைப் பற்றி முதலில் பார்க்கலாம்.

## காணக்கூடிய சபை

காணக்கூடிய சபையில் உள்ள ஐக்கியத்திற்கு பல அம்சங்கள் இருந்தாலும், நாம் மூன்றில் மட்டுமே கவனம் செலுத்துவோம்: முதலில், கிருபையின் உபாயங்கள்; இரண்டாவது, ஆவிக்குரிய வரங்கள்; மற்றும் மூன்றாவது



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

சம்பத்துக்கள் அல்லது பொருட்கள். கிருபையின் உபாயங்களைப் பற்றி முதலில் பார்ப்போம்.

## கிருபையின் உபாயங்கள்

கிருபையின் உபாயங்கள் என்பவை தேவன் பொதுவாக மக்களுக்கு கிருபையை அளிக்க பயன்படுத்தும் கருவிகள் அல்லது வழிமுறைகள் ஆகும். மெத்தடிஸ்ட் சபையின் நிறுவனர்களில் ஒருவரான ஜான் வெஸ்லி, பல கிறிஸ்தவ மரபுகளின் நம்பிக்கைகளை பிரதிபலிக்கும் விதத்தில் கிருபையின் உபாயங்களை விவரித்தார். மல்கியா 3:7 இன் அடிப்படையில் அவர் தனது பிரசங்க எண் 16 இல் எழுதியதைக் கவனியுங்கள்:

> ”கிருபையின் உபாயங்கள்” என்பதன் மூலம் நான் புரிந்து கொள்வது என்னவென்றால், வெளிப்புற அடையாளங்கள், வார்த்தைகள் அல்லது செயல்கள் இந்த நோக்கத்திற்காக நியமிக்கப்பட்ட சாதாரண பாதைகளாக இருக்கும்படி தேவனால் நியமிக்கப்படுகின்றன, இதன் மூலம் அவர் மனிதர்களுக்கு தடுக்ககூடிய, நீதிமானாக்கக்கூடிய அல்லது பரிசுத்தப்படுத்துக்கூடிய கிருபையை அளிக்கிறார்.
>
> நீங்கள் வந்த பாரம்பரியத்தைப் பொறுத்து, ”அவைகள் எப்படி செயல்படுகின்றன?” என்பதை நான் கேட்கும்போது, கிருபையின் உபாயங்களை சிலர் ஆவிக்குரிய ஒழுக்கங்கள் அல்லது பயபக்தியின் செயல்கள் என்று குறிப்பிடுகிறார்கள். நான் எப்போதும் சொல்ல விரும்பும் விஷயம் என்னவென்றால், “அவர்கள் கிரியை செய்ய மாட்டார்கள். தேவன் தான் கிரியை செய்கிறார்; தேவனின் கிருபையே கிரியை செய்கிறது.” ஆனால், கிருபையின் உபாயங்கள் அந்த கிருபையைப் பெறவும் செயலாக்கவும் நமக்கு வாய்ப்புகளை வழங்குகின்றன. அவைகள் நம் வாழ்வில் கிரியை செய்யும் தேவ கிருபையில் கவனம் செலுத்த நேரத்தையும் இடத்தையும் உருவாக்குகின்றன. அவைகள் குழாய்களாக இருப்பதாக நான் நினைக்க விரும்புகிறேன். நம் குழாயை தண்ணீருடன் கலக்க விரும்புவதில்லை. இது நாம் பெற விரும்பும் ஜீவ தண்ணீர் ஆகும். ஆனால் அந்த நீரை நம்மிடம் கொண்டு வர உதவுவது குழாய்கள் தான். அதனால் அந்த நீரை நாம் குடிக்க முடியும், கிருபையின் உபாயங்கள் ஜீவத் தண்ணீரைக் குடிக்க நமக்கு உதவுகின்றன.

Dr. ஸ்டீவ் ஹார்ப்பர்

நடைமுறையில் சொல்வதானால், தேவன் நமக்கு கிருபையைப் அளிக்கப் பயன்படுத்தும் பல உபாயங்கள் உள்ளன, இதில் துன்பம் மற்றும் பாடுகள், விசுவாசம், அன்பு மற்றும் ஐக்கியம் போன்றவை அடங்கும். ஆனால் பாரம்பரியமாக, இறையியலாளர்கள் குறிப்பாக மூன்று குறிப்பிட்ட கிருபையின் உபாயங்களான தேவனின் வார்த்தை, ஞானஸ்நானம் மற்றும் கர்த்தருடைய பந்தி போன்ற சடங்குகளிலும் பிரார்த்தனையிலும் கவனம் செலுத்துகின்றனர். இந்த மூன்று கிருபையின் உபாயங்களும் அதன் விசுவாசிகள் மற்றும் அவிசுவாசிகள் உட்பட ஒட்டுமொத்தமாக காணக்கூடிய சபைக்கு சொந்தமானவை.

கிறிஸ்தவ போதனையின் பாரம்பரிய புராட்டஸ்டண்டு சபைகளின் சுருக்கமான *வெஸ்ட்மின்ஸ்டர் ஷார்ட்டர் கேட்டகிஷம்,* அதன் கேள்வி பதில் எண் 88 இல் கிருபையின் உபாங்களை விவரிக்கிறது:

> கேள்வி: கிறிஸ்துவினுடைய மீட்பின் நன்மைகளை நமக்குத் தரும் வெளிப்புற உபாயங்கள் எவை?
>
> பதில்: அவருடைய சடங்கு கட்டளைகள், குறிப்பாக அவருடைய வார்த்தை, சடங்குகள் மற்றும் பிராத்தனை போன்றவை கிறிஸ்து நமக்கு மீட்பின் நன்மைகளைத் தரும் வெளிப்புற மற்றும் சாதாரண உபாயங்கள் ஆகும்; இவை அனைத்தும் இரட்சிப்பிற்காக தெரிந்தெடுக்கப்பட்டவர்களுக்கு பயனுள்ளவையாக மாற்றப்படுகின்றன.

ரோமர் 10:14, 1 கொரிந்தியர் 10:17 மற்றும் 1 பேதுரு 3:12, 21 போன்ற இடங்களில் இந்த கிருபையினுடைய உபாயங்களின் நன்மைகளைப் பற்றி வேதம் பேசுகிறது.

மீட்பின் நன்மைகள் இரட்சிக்கப்பட்டவர்களுக்கு மட்டுமே, அதாவது காண முடியாத சபைக்கு மட்டுமே இருந்தாலும், சபை சடங்கு கட்டளைகள் காணக்கூடிய சபைக்கானதாகும். காண முடியாத சபை கண்ணுக்குத் தெரியாததாக உள்ளது. அதில் யார் இருக்கிறார்கள் என்பது நமக்குத் தெரியாது. இது எந்த ஆராதனை கூட்டங்களையும் நடத்துவதில்லை. அதற்கு சொந்தமாக ஊழியக்கார்கள் இல்லை. அதற்கு சொந்தமாக சபை அரசாங்கமும் இல்லை. அவைகள் காணக்கூடிய சபைக்கு மட்டுமே நியமிக்கப்பட்டுள்ளன. அதுபோலவே, நம்முடைய எல்லா கிருபையின் உபாயங்களான – நமது பிரசங்கம், ஞானஸ்நானம், கர்த்தருடைய பந்தியை ஆசரித்தல்கள் மற்றும் பிராத்தனைகள் – போன்றவை மற்றவர்களால் கவனிக்கப்படலாம். அவர்கள் காணப்படக்கூடியவை. அவை காணக்கூடிய சபை

பொதுவாகப் பகிர்ந்து கொள்ளும் காரியங்கள் ஆகும், எனவே அவை காணக்கூடிய சபையின் ஐக்கியத்தின் ஒரு பகுதியாகும்.

கிருபையின் உபாயங்கள் எப்போதுமே முக்கியமான சபை சடங்கு கட்டளைகளாக இருந்திருக்கின்றன, இவைகள் மூலம் தேவன் பொதுவாக மீட்பின் ஆசீர்வாதங்களை நம் வாழ்வில் தருகிறார், மேலும் நாம் அவற்றை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இரட்சிக்கும் சுவிசேஷத்தை நாம் பிரசங்கிக்க வேண்டும், மேலும் ஞானத்தையும் முதிர்ச்சியையும் தரும் வார்த்தையை போதிக்க வேண்டும். சுவிசேஷத்தை காணக்கூடிய விதத்தில் வழங்கும் சடங்குகளை நாம் ஆசரிக்க வேண்டும் மற்றும் தேவனின் உடன்படிக்கையில் நம்மை முத்திரையிட வேண்டும். மேலும் தேவனுடைய கிருபைக்காகவும், மன்னிப்புக்காகவும், மனமாற்றங்கள் மற்றும் முதிர்ச்சிக்காகவும், பாவத்தை எதிர்ப்பதற்கும், தீமையிலிருந்து பாதுகாக்கப்படவும், நம்முடைய தேவைகாலத்தில் விடுதலைக்காகவும் ஜெபிக்க வேண்டும். இந்த எல்லா வழிகளிலும் மற்றும் அதற்கு மேலும், கிருபையின் உபாயங்கள் காணக்கூடிய சபையின் மதிப்புமிக்க ஊழியங்கள் ஆகும்.

கிருபையின் உபாயங்களைத் தவிர, காணக்கூடிய சபை பொதுவாக ஆவிக்குரிய வரங்களையும் கொண்டுள்ளது.

## ஆவிக்குரிய வரங்கள்

இப்போது, ஆவிக்குரிய வரங்கள் முழு சபைக்கும் சொந்தமானது என்று நாம் கூறும்போது, காணக்கூடிய சபையில் உள்ள அனைவருக்குள்ளும் பரிசுத்த ஆவியானவர் வாசம் செய்கிறார் என்று நாம் கூறவில்லை. அவர்கள் அனைவரிலும் பரிசுத்த ஆவியானவர் வாசம் செய்வது இல்லை. விசுவாசிகளுக்குள் மட்டுமே பரிசுத்த ஆவியானவர் வாசம் செய்கிறார். அப்படியே, பரிசுத்த ஆவியானவர் காணக்கூடிய சபையை கட்டியெழுப்பும் நோக்கத்திற்காக அனைத்து ஆவிக்குரிய வரங்களையும் பயன்படுத்துகிறார். இதன் அர்த்தம் என்னவென்றால், சிலருக்கு, இது அவர்களின் பரிசுத்தத்தை அதிகரிக்கிறது மற்றும் முதிர்ச்சியை நோக்கி வளரச் செய்கிறது. மற்றவர்களுக்கு, அவர்களை முதலில் விசுவாசத்திற்குள் கொண்டு வருகிறது. ஆனால் எல்லா சந்தர்ப்பங்களிலும், காணக்கூடிய சபையில் உள்ள அனைவரும் ஆவிக்குரிய வரங்களால் பயன்பெறுகிறார்கள், மேலும் அவைகளில் பங்கெடுக்கவும் ஓரளவு அனுமதிக்கப்படுகிறார்கள். இதன் காரணமாக, ஆவிக்குரிய வரங்கள் முழு காணக்கூடிய சபையாலும் பகிரப்படுகின்றன என்று சொல்வது சரியானது.

ஆவிக்குரிய வரங்கள் முழு காணக்கூடிய சபையாலும் பகிரப்படுகின்றன என்பது பல வழிகளில் நிரூபிக்கப்படுகிறது. முதலில், அவை பொது ஆராதனைகளில் பயன்படுத்தப்படுகின்றன. இதை நாம் 1 கொரிந்தியர் 14:13-26 இல்

வெளிப்படையாகக் காண்கிறோம். இரண்டாவதாக, முழு சபையையும் கட்டியெழுப்ப வரங்கள் வழங்கப்படுகின்றன. இதை நாம் 1 கொரிந்தியர் 12:4-7 மற்றும் எபேசியர் 4:3-13 போன்ற இடங்களில் பார்க்கிறோம். மூன்றாவதாக, 1 கொரிந்தியர் 14:21, 22 இல் நாம் வாசிப்பது போல, சபையில் உள்ள அவிசுவாசிகளுக்குக் கூட அந்நிய பாஷைகள் ஒரு அடையாளம் என்று பவுல் குறிப்பிட்டார். நான்காவது, சபையில் உள்ள அவிசுவாசிகள் எபிரெயர் 6:4-6 இல் உள்ள ஆவிக்குரிய வரங்களிலிருந்து பயனடையத் தவறியதற்காக கண்டிக்கப்படுகிறார்கள். இந்த வழிகளில், சபையின் ஆவிக்குரிய வரங்களில் விசுவாசிகள் மற்றும் அவிசுவாசிகள் ஒரே மாதிரியாகப் பங்கு பெறுகிறார்கள் என்று வேதம் தெளிவுபடுத்துகிறது.

கிருபையின் உபாயங்களைப் போலவே, ஆவிக்குரிய வரங்களும் நவீன காணக்கூடிய சபைக்கு ஒரு பெரிய நன்மையாகும். சத்தியத்தை அறிவிக்கவும் இழந்து போனவர்களை மனமாற்றமடையச் செய்யவும் அவை பயனுள்ளதாக இருக்கும். விசுவாசிகள் விசுவாசத்திலும் முதிர்ச்சியிலும் வளர உதவுவதற்கு அவை பயனுள்ளதாக இருக்கும். மேலும் தேவன் ஜனங்களின் பூமிக்குரிய தேவைகளைப் பூர்த்தி செய்ய இரக்கம் மற்றும் அந்நியரை உபசரித்தல் போன்ற பல வரங்கள் பயனுள்ளதாக இருக்கும். பரிசுத்த ஆவியானவர் தனது ஜனங்களுக்கு வரங்களை வழங்கும்போதெல்லாம், அந்த வரங்கள் அனைவரின் நலனுக்காக பயன்பட ஊக்குவிக்கப்பட வேண்டும், மேலும் காணக்கூடிய சபையில் ஆவிக்குரிய வரங்களை உடையவர்கள் அதை பயன்படுத்த அவர்களுக்கு எந்த தடையும் இருக்கக்கூடாது.

உறுப்பினர்கள் தங்கள் பொருட்களை ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்ளும் விதத்தில் ஒற்றுமையானது காணக்கூடிய சபையிலும் இருக்கிறது.

## சரீரப்பிரகாரமான சம்பத்துக்கள்

வேதாகமத்திலும் ஆரம்பகால சபையிலும் ஐக்கியம் அல்லது *கொயினோனியா* (κοινωνία) என்ற அர்த்தத்தின் ஒரு பகுதி என்னவென்றால், கிறிஸ்தவர்கள் தங்கள் சரீரப்பிரகாரமான சம்பத்துக்களை காணக்கூடிய சபையில் தேவையுள்ளவர்களுடன் பகிர்ந்து கொண்டனர் என்பதாகும். ரோமர் 15:26, 2 கொரிந்தியர் 8:4 மற்றும் 9:13, மற்றும் எபிரெயர் 13:16 போன்றவற்றில் *கொயினோனியா* (κοινωνία) என்ற வார்த்தை பெரும்பாலும் ஏழைகளுக்கு பங்கிட்டு கொடுப்பதைக் குறிக்க பயன்படுத்தப்பட்டது.

*கொயினோனியா* (κοινωνία) என்ற வார்த்தை பயன்படுத்தப்படாவிட்டாலும், ஆரம்பகால கிறிஸ்தவர்களின் நடைமுறையில் ஐக்கியத்தின் இந்த அம்சத்தைக் காணலாம். உதாரணமாக, நாம் அப்போஸ்தலருடைய நடபடிகள் 2:44-45 மற்றும் 4:34-35 ஆகியவற்றில் காண்கிறது போல, பல ஆரம்பகால கிறிஸ்தவர்கள் தங்கள்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

உடைமைகளை விற்று வருமானத்தை சபைக்கு வழங்கினர். ஆரம்பகால சபையில், சில வீர கிறிஸ்தவர்கள் மற்றவர்களை விடுவிப்பதற்காக அல்லது ஏழைகளுக்கு உணவளிக்க பணம் திரட்டுவதற்காக தங்களை அடிமைத்தனத்திற்கு விற்றனர்.

கி. பி. 30 முதல் 100 வரை வாழ்ந்த ஆரம்பகால சபை பிதாவான க்ளெமென்ட், கொரிந்தியர்களுக்கு எழுதிய *1 க்ளெமென்ட்* என்று பொதுவாக அறியப்பட்ட ஒரு கடிதத்தில் இந்த நடைமுறையைப் பற்றி எழுதினார். அந்த கடிதத்தின் 55 ஆம் அதிகாரத்திலிருந்து இந்த வார்த்தைகளைக் கவனியுங்கள்:

> மற்றவர்களை மீட்கும் பொருட்டு, தங்களை சிறைப்படுத்த விட்டுக்கொடுத்த பலரை நாம் அறிவோம். பலர் தங்களுக்கு கிடைத்த பணத்தில் மற்றவர்களுக்கு உணவு வழங்குவதற்காக தங்களை அடிமைத்தனத்திற்கு ஒப்புக்கொடுத்தனர்.

ஆரம்பகால சபையில் ஐக்கிய உணர்வு மிகவும் வலுவாக இருந்தது, மேலும் விசுவாசிகள் தங்களை விட மற்றவர்களை மிகவும் உயர்வாக கருதினர், அவர்கள் தங்கள் உடைமைகளை பகிர்ந்து கொள்ள தயாராக இருந்தது மட்டுமல்லாமல், மற்றவர்களுக்கு கொடுப்பதற்காக தங்கள் சுதந்திரத்தை தியாகம் செய்யக் கூட தயாராக இருந்தனர். 2 கொரிந்தியர் 8:3-5 இல் உள்ள பவுலின் வார்த்தைகள் அவர்களின் சிந்தனையை விளக்க உதவுகின்றன. அங்கே அவர் என்ன சொல்லியிருக்கிறார் என்று கவனிக்கவும்:

> மேலும் அவர்கள் தங்கள் திராணிக்குத் தக்கதாகவும், தங்கள் திராணிக்கு மிஞ்சியும் கொடுத்தார்கள் … தங்கள் உபகாரத்தையும், பரிசுத்தவான்களுக்குச் செய்யப்படும் தர்ம ஊழியத்தின் பங்கையும் நாங்கள் ஏற்றுக்கொள்ளும்படி அவர்கள் எங்களை மிகவும் வேண்டிக்கொண்டார்கள் … தேவனுடைய சித்தத்தினாலே முன்பு தங்களைத்தாமே கர்த்தருக்கும், பின்பு எங்களுக்கும் ஒப்புக்கொடுத்தார்கள் (2 கொரிந்தியர் 8:3-5).

இந்த வேத பகுதியில், மக்கெதோனியா சபைகளின் தாராள மனப்பான்மையை பவுல் விவரித்தார். மேலும் அவர்கள் தேவனிடம் தங்களை அர்ப்பணித்தது தான் அவர்களை தேவனுடைய காணக்கூடிய சபையுடன் பகிர்ந்து கொள்வதில் மிகவும் தியாகம் செய்ய வழிவகுத்தது என்று அவர் விளக்கினார்.

தேவைப்படுபவர்களுடன் பொருட்களை பகிர்ந்து கொள்வது காணக்கூடிய சபை வாழ்க்கையின் ஒரு முக்கிய பகுதியாகும். முழு சபையும் தேவனுடைய ஜனங்களும், அவருடைய உடன்படிக்கை சமூகமுமாய் இருக்கிறது. அதில் உள்ள



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அனைவரையும் அவர் கவனித்துக்கொள்கிறார், அதைச் செய்ய அவர் நம்மையும் அழைக்கிறார். தெளிவாகச் சொல்வதானால், நம்மிடம் இருப்பதெல்லாம் தேவனுக்குச் சொந்தமானதாகும். அவர் நம்மை அவருடைய உடைமையின் உக்கிராணக்காரர்களாக மட்டுமே ஆக்கியுள்ளார். மேலும், நம்முடைய தொண்டு மற்றும் கொடுத்தல் அவருடைய மக்களுக்கு தேவனுடைய ஊழியமும், உலகத்திற்கு சுவிசேஷத்தின் சாட்சியும் ஆகிறது. ஆகவே, நாம் அவருக்கு விசுவாசமாக இருக்க விரும்பினால், தேவனின் உடைமையை அவருடைய மக்களுக்கு கிடைக்காமல் நாம் தடுத்து நிறுத்தக் கூடாது.

இப்போது நாம் காணக்கூடிய சபையில் பரிசுத்தவான்களின் ஐக்கியத்தைப் பற்றி ஆராய்ந்தோம், காண முடியாத சபை பகிர்ந்து கொள்ளும் ஐக்கியத்தைப் பற்றிப் பார்க்க நாம் தயாராக இருக்கிறோம்.

## காண முடியாத சபை

காண முடியாத சபையில் பரிசுத்தவான்களின் ஐக்கியம் தொடர்பான இரண்டு முக்கிய கருத்துக்களை பார்ப்போம். முதலில், அனைத்து விசுவாசிகளும் கிறிஸ்துவுடன் ஒருங்கிணைந்து இருப்பதைப் பற்றி பேசுவோம். இரண்டாவதாக, காண முடியாத சபையில் மற்ற விசுவாசிகளுடன் நாம் ஒருங்கிணைந்து இருப்பதைப் பற்றி பேசுவோம். கிறிஸ்துவுடனான நமது ஐக்கியத்தை முதலில் ஆரம்பிக்கலாம்.

### கிறிஸ்துவுடன் ஐக்கியம்

விசுவாசிகள் கிறிஸ்துவுடன் ஐக்கியமாக இருப்பதாக புதிய ஏற்பாடு அடிக்கடி குறிப்பிடுகிறது. இந்த கருத்து பொதுவாக விசுவாசிகள் ”கிறிஸ்துவில்” அல்லது ”இயேசுவில்” அல்லது ”அவரில்” இருப்பதாகக் கூறப்படுகிறது. ஒருபுறம், இந்த ஐக்கியம் என்பது இயேசு விசுவாசிகளை பிதாவுக்கு முன்பாக, குறிப்பாக அவருடைய மரணம் மற்றும் உயிர்த்தெழுதலில் பிரதிநிதித்துவப்படுத்துவதைக் குறிக்கிறது. ஆனால் மறுபுறம், விசுவாசிகள் மாய ரீதியாக இயேசுவோடு ஒரு முக்கியமான வழியில் ஒன்றிணைந்திருக்கிறார்கள் என்று அர்த்தம். இயேசு விசுவாசிகளில் வாழ்கிறார், விசுவாசிகள் அவரில் வாழ்கிறார்கள்.

> குறிப்பாக நாம் இயேசு கிறிஸ்துவுடன் ஐக்கியமாக இருக்கிறோம் என்பது அப்போஸ்தலனாகிய பவுலின் முக்கிய போதனைகளில் ஒன்று என நான் நினைக்கிறேன்; ஆகவே நாம் அவருக்கு சொந்தமானவர்கள். வேதாகம வெளிப்பாடுகள் அனைத்தையும் பார்க்கும்போது, நாம் ஆதாமில் இருக்கிறோம் அல்லது கிறிஸ்துவில் இருக்கிறோம் என்று வேதம் போதிக்கிறதாக நான்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

நினைக்கிறேன். நிச்சயமாக ஆதாம் தான் முதல் மனிதர் ஆவார். எல்லா மனிதர்களும் ஆதாமின் குமாரர்களாகவும் குமாரத்திகளாகவும் பிறக்கிறார்கள். அதனால் அவர்கள் பாவிகளாக உலகிற்கு வருகிறார்கள். அவர்களுக்கு பாவ இயல்பு இருக்கிறது. அவர்கள் தேவனைவிட்டு தூரமாய் போயிருக்கிறார்கள். இரட்சிக்கப்படுதல் மற்றும் மீட்கப்படுதல் மற்றும் கிறிஸ்துவில் நம்பிக்கை வைப்பது என்பதன் அர்த்தம் என்னவென்றால், கிறிஸ்துவுக்குள் இணைக்கப்பட்டு, கிறிஸ்துவுக்குச் சொந்தமானவர்களாக மாறுவதாகும். கிறிஸ்துவுடன் ஐக்கியமாக இருப்பதன் அர்த்தம் என்னவென்றால், அவரின் ஒரு பகுதியாக இருப்பதாகும்.

Dr. தாமஸ் ஆர். ஸ்கிரைனர்

கிறிஸ்துவின் ஐக்கியத்தில் இருப்பதால் தான் நாம் அவரின் அனைத்து நன்மைகளையும் பெறுகிறோம். வரலாற்று ரீதியாக பார்க்கும்போது பின்வருபவைகள் தான் நன்மைகள் என்று புரிந்துகொள்கிறோம்: நீதிமானாக்குதல், பரிசுத்தமாக்குதல், புத்திரசுவிகாரம் – இரட்சிப்பில் நாம் பெற்றுக்கொள்ளுகிற ஆசீர்வாதங்களின் அடிப்படையில் நாம் விவரிக்கும் அனைத்து விஷயங்களும் இதில் அடங்கும். கிறிஸ்துவில் மட்டுமே அவைகளைப் பெற்றுக்கொள்ள முடியும். எனவே, இந்த நன்மைகளைப் பெறுவதற்கு கிறிஸ்துவோடு ஐக்கியமாக இருப்பது நமக்கு முக்கியமும் அவசியமுமாகும். இந்த நன்மைகளை நாம் எப்படிப் பெறுகிறோம், அல்லது நாம் எவ்வாறு கிறிஸ்துவுடன் ஐக்கியமாக இருக்கிறோம்? நாம் விசுவாசத்தால் மட்டுமே ஒன்றிணைக்கப்படுகிறோம். விசுவாசமே நம்மை கிறிஸ்துவோடு ஒன்றிணைக்கிறது, இந்த விசுவாசமானது தேவனிடமிருந்து வரும் ஈவு ஆகும்.

Dr. ஜெப்ரி கே. ஜூ

இறையியலாளர்கள் இயேசுவிற்கும் விசுவாசிகளுக்கும் இடையிலான இந்த முக்கிய ஒருங்கிணைப்பை மாயமானது என்று அடிக்கடி பேசுகிறார்கள், ஏனென்றால் அது எவ்வாறு செயல்படுகிறது என்பதை வேதம் சரியாக விளக்கவில்லை. ஆனால் இந்த ஐக்கியம் நம் சரீரங்கள் மற்றும் ஆவிகள் இரண்டையும் உள்ளடக்கியது என்பதை வேதம் தெளிவுபடுத்துகிறது. இதை நாம்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

யோவான் 15:4-7, ரோமர் 8:9-11 மற்றும் பல இடங்களில் பார்க்கிறோம். ஒரு உதாரணத்திற்காக, 1 கொரிந்தியர் 6:15-17 இல் உள்ள பவுலின் வார்த்தைகளைக் கவனியுங்கள்:

> உங்கள் சரீரங்கள் கிறிஸ்துவின் அவயவங்களென்று அறியீர்களா? … கர்த்தரோடிசைந்திருக்கிறவனும், அவருடனே ஒரே ஆவியாயிருக்கிறான் (1 கொரிந்தியர் 6:15-17).

1834 முதல் 1892 வரை வாழ்ந்த புகழ்பெற்ற பாப்டிஸ்ட் பிரசங்கியார் சார்லஸ் ஸ்பர்ஜன், எபேசியர் 5:30 யை அடிப்படையாகக் கொண்ட த மேட்ச்லெஸ் மிஸ்டரி என்ற பிரசங்கத்தில் கிறிஸ்துவுடனான நம் ஐக்கியத்தைப் பற்றி பேசினார். அங்கே அவர் என்ன சொல்லியிருக்கிறார் என்று கவனிக்கவும்.

> நமக்கும் கிறிஸ்துவுக்கும் இடையே ஒரு முக்கியமான ஐக்கியம் உள்ளது … இது ஒற்றுமை அல்ல; ஆனால் இது அடையாளம் ஆகும். இது இணைந்திருத்தலை விட ஒரு படி மேல்; இது முழுவதின் ஒரு பகுதியாகவும், ஒட்டுமொத்தத்தின் இன்றியமையாத பகுதியாகவும் ஆக்கப்படுகிறது … கிறிஸ்துவுக்கு … அவருடைய ஜனங்கள் வேண்டும்; அவர்கள் அவருக்கு முக்கியமானவர்கள் ஆவர்.

கிறிஸ்துவுடனான நமது ஐக்கியம் மிகவும் முக்கியமானது என்று நினைப்பது ஆச்சரியமாக இருக்கிறது, நாம் அவரிடமிருந்து பிரிக்கப்பட்டால் கிறிஸ்துவுக்கு தான் நஷ்டமாகும். அவர் நம்மை நேசித்தார், நமக்காக மரித்தார். ஆகையால் அவருடைய வெகுமதியாகவும், அவருடைய உடைமையாகவும் நாம் இருக்கிறோம். நாம் அவருடன் ஐக்கியமாக இருப்பதால், ஒவ்வொரு விசுவாசியும் நம் இரட்சிப்பு மிகுந்த பாதுகாப்பாக இருக்கிறது என்பதையும், மன்னிக்கப்பட்டு விட்டோம் என்கிற உத்திரவாதத்தையும், தேவனுக்கு முன்பாக நமது சரியான நிலைப்பாட்டின் பெரும் ஊக்கத்தையும் உணர வேண்டும். கிறிஸ்துவால் ஊட்டச்சத்து கொடுக்கப்பட்டு, அவருடைய ஆவியால் நிலைநிறுத்தப்பட்டு, இந்த ஐக்கியத்திலிருந்து நாம் பலம் பெற வேண்டும். நாம் கிறிஸ்துவுக்குள் மறைந்திருப்பதால், பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியின் பார்வையில் நாம் பரிபூரணமாக இருக்கிறோம் என்பதை அறிந்து, தேவனுடனான நமது ஐக்கியத்தில் நாம் தைரியமாய் இருக்க வேண்டும். நம் பாவங்களுக்காக அவர்கள் நம்மை ஒழுங்குபடுத்த மாட்டார்கள் என்பது இதன் அர்த்தமல்ல. ஆனால் அவர்கள் நம்மை ஒழுங்குபடுத்தும் போது, அது ஒரு அன்பான வேலையாக இருக்கும், அது நம்மை ஒரு பக்குவத்திற்கு கொண்டு வருவதோடு, தேவனுடன் என்றென்றும் ஐக்கியமாக இருக்க நம்மை தகுதிப்படுத்தும்.

இப்போது நாம் கிறிஸ்துடனான விசுவாசிகளின் ஐக்கியத்தைப் பார்த்திருக்கிறோம், கிறிஸ்துவில் உள்ள மற்ற விசுவாசிகளுடனான நமது ஐக்கியத்தைப் பார்க்க நாம் இப்போது தயாராக இருக்கிறோம்.

## விசுவாசிகளுடன் ஐக்கியம்

காண முடியாத சபையில் உள்ள ஒவ்வொரு நபரும் கிறிஸ்துவுடன் ஒன்றிணைந்திருப்பதால், விசுவாசிகளும் அவரில் ஒருவருக்கொருவர் ஐக்கியப்பட்டிருக்கிறார்கள். இதை நாம் ரோமர் 12:5, கலாத்தியர் 3:26-28, எபேசியர் 4:25 மற்றும் பல இடங்களில் பார்க்கிறோம். யோவான் 17:22-23 இல் இந்த ஐக்கியத்தைப் பற்றி இயேசு பிதாவிடம் பேசிய விதத்தைக் கவனியுங்கள்:

> நாம் ஒன்றாயிருக்கிறதுபோல அவர்களும் ஒன்றாயிருக்கும்படி, நீர் எனக்குத்தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன். ஒருமைப்பாட்டில் அவர்கள் தேறினவர்களாயிருக்கும்படிக்கும், என்னை நீர் அனுப்பினதையும், நீர் என்னில் அன்பாயிருக்கிறதுபோல அவர்களிலும் அன்பாயிருக்கிறதையும் உலகம் அறியும்படிக்கும், நான் அவர்களிலும் நீர் என்னிலும் இருக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன் (யோவான் 17:22-23).

காணக்கூடிய சபையுடனான நமது ஐக்கியம் உறவு சம்பந்தமானதாகவும் அனுபவமானதாகவும் இருந்தாலும், காண முடியாத சபையுடனான நமது ஐக்கியம் ஆவிக்குரியதாகவும் இருத்தலியல் தொடர்பானதாகவும் இருக்கிறது. நம்முடைய இருப்பு கிறிஸ்து மற்றும் அவரது ஆவியின் மூலம் ஒன்றிணைக்கப்பட்டுள்ளது . இதன் விளைவாக, பவுல் 2 கொரிந்தியர் 5:14-16, கலாத்தியர் 3:28, மற்றும் கொலோசெயர் 3:11 ஆகியவற்றில் போதித்தபடி, நாம் அனைவரும் கிறிஸ்துவில் சமமான தகுதியைக் கொண்டுள்ளோம். நாம் 1 கொரிந்தியர் 12:26 இல் வாசிப்பது போல், ஒருவர் பிறரின் மகிழ்ச்சியையும் வலியையும் அனுபவிக்கிறோம்.

மேலும் காண முடியாத சபையின் ஐக்கியம் பூமியில் உள்ள சபைக்கு மட்டும் அல்ல; இது பரலோகத்தில் உள்ள சபைக்கும் ஆனதாகும், அதாவது ஏற்கனவே மரித்து கர்த்தருடன் இருக்கச் சென்ற விசுவாசிகளுக்கும் இது பொருந்தும். பூமியில் உள்ள விசுவாசிகள் கிறிஸ்துவிலும் கிறிஸ்துவின் மூலமும் ஒருவருக்கொருவர் ஒரு மாய ரீதியிலான ஐக்கியத்தில் இருப்பதைப் போலவே, கிறிஸ்துவுடன் இணைந்திருக்கும் அனைவருடனும் ஒரே மாதிரியான ஐக்கியத்தைக் கொண்டிருக்கிறோம் – அதாவது இப்போது பரலோகத்தில் உள்ள விசுவாசிகளோடும் நமக்கு ஐக்கியம் இருக்கிறது. எபிரெயர் 11:4 மற்றும் 12:22-24 போன்ற இடங்களில் வேதம் இந்த கருத்தை போதிக்கிறது.

இந்த உண்மையைக் கற்பிக்க வேதம் பயன்படுத்தும் ஒரு குறிப்பிடத்தக்க கற்பனைப் படம் சபையை கிறிஸ்துவின் மணவாட்டியாக சித்தரிப்பதாகும். காணக்கூடிய சபை கிறிஸ்துவின் மணவாட்டியாக கருதப்படும் ஒரு உணர்வு உள்ளது, ஆனால் இது எப்போதும் காண முடியாத சபையில் மணவாட்டியின் பரிபூரணத்தை நோக்கிய பார்வையுடன் இருக்கும். இதை பழைய ஏற்பாட்டில் ஏசாயா 54:5-8, ஒசியா 2:19-20, மற்றும் எபேசியர் 5:26-27 ஆகியவற்றில் காண்கிறோம். மேலும் இந்த கற்பனை படங்களின் நிறைவேறுதல் வெளிப்படுத்தின விசேஷம் 19 இல் உள்ள பூரணப்பட்ட காண முடியாத சபையில் தோன்றுகிறது.

வெளிப்படுத்தின விசேஷம் 19:6-8 இல் உள்ள யோவானின் தரிசனம் பற்றிய கணக்கை கவனியுங்கள்:

> அப்பொழுது திரளான ஜனங்கள் இடும் ஆரவாரம்போலவும், பெருவெள்ள இரைச்சல்போலவும், பலத்த இடிமுழக்கம்போலவும், ஒரு சத்தமுண்டாகி: ”அல்லேலூயா! சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் ராஜ்யபாரம்பண்ணுகிறார். நாம் சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்து அவருக்குத் துதிசெலுத்தக்கடவோம். ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது, அவருடைய மனைவி தன்னை ஆயத்தம்பண்ணினாள். சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரம் தரித்துக்கொள்ளும்படி அவளுக்கு அளிக்கப்பட்டது” (அந்த மெல்லிய வஸ்திரம் பரிசுத்தவான்களுடைய நீதிகளே.) (வெளிப்படுத்தின விசேஷம் 19:6-8).

எல்லா காலங்களிலும் உள்ள மீட்கப்பட்ட சகல பரிசுத்தவான்களையும் உள்ளடக்கிய கிறிஸ்துவின் மணவாட்டியாகிய சபையில் ஒருவரோடொருவர் ஐக்கியமாயிருப்பதை இங்கே நாம் காண்கிறோம். ஒவ்வொரு விசுவாசியின் நேர்மையான செயல்களால் ஆன ஒரு திருமண ஆடையை அணிந்து நாம் அனைவரும் ஒன்றாக நிற்கிறோம்.

கிறிஸ்துவில் விசுவாசிகள் ஒருவருக்கொருவர் ஒன்றிணைந்திருக்கிறார்கள் என்ற உண்மையிலிருந்து வேதம் பல பயன்பாடுகளைத் தருகிறது. ஒவ்வொரு விசுவாசியும் மதிப்புமிக்கவர்களும் கிறிஸ்துவுக்கு இன்றியமையாதவர்களுமாய் இருக்கிறார்கள் என்று அது நமக்குக் போதிக்கிறது. இது ஒருவருக்கொருவர் மதிப்பு கொடுக்கவும், ஒருவருக்கொருவர் ஊழியம் செய்யவும் கற்றுக்கொடுக்கிறது. ஒருவருக்கொருவர் கருணை காட்டவும், கனிவாக இருக்கவும், மென்மையாகவும் பொறுமையாகவும் இருக்கவும், மன்னிக்கவும் இது நமக்குக் போதிக்கிறது. மற்றவர்கள் நம்மை எப்படி நடத்த வேண்டும் என்று விரும்புகிறோமோ, நம்மை நாம் எப்படி நடத்துகிறோமோ



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அதேபோல நாமும் பிறரை நடத்த வேண்டும் என்று அது நமக்கு கற்றுக்கொடுக்கிறது. ஏனென்றால், கிறிஸ்துவின் மூலம் அவர்களுடன் நாம் இணைந்திருப்பதால், அவர்கள் நம் சரீரத்தைப் போலவே நம்முள் ஒரு பகுதியாக இருக்கிறார்கள்.

# முடிவுரை

*அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கை* பற்றிய இந்த பாடத்தில், சபையைப் பற்றிய உபதேசத்தைப் பார்த்தோம். சபையின் தெய்வீக ஒப்புதலை தேவனின் விசேஷித்த சமூகமாக நாம் பார்த்தோம். சபை பரிசுத்தமானதென்றும், பிரித்தெடுக்கப்பட்டதென்றும் தூய்மையானதென்றும் நாம் விவாதித்தோம். நாம் அதன் உலகளாவிய தன்மையைப் பற்றி பேசினோம். மேலும் இது எவ்வாறு பரிசுத்தவான்களின் ஐக்கியமாக இருக்கிறது என்பதற்கான வழிகளை விளக்கியிருக்கிறோம்.

நவீன கிறிஸ்தவர்களாக, சபையைப் பற்றிய நமது அனுபவம் பெரும்பாலும் வேதாகமத்தின் நாட்களிலிருந்தும் *அப்போஸ்தலர்களின் விசுவாச அறிக்கை* உருவான நாட்களிலிருந்தும் மிகவும் வித்தியாசமானது. ஆனால் சபையில் வாழ்க்கையின் அடிப்படை உண்மைகள் ஒருபோதும் மாறவில்லை. சபை இன்னும் தேவனுடைய உடன்படிக்கை ஜனங்களாகவே உள்ளது. சுவிசேஷத்தை உலகிற்கு கொண்டு வருவதற்கும், உலகை பூமியில் அவருடைய ராஜ்யமாக மாற்றுவதற்கும் இது இன்னும் அவர் தேர்ந்தெடுத்த பாத்திரமாகவே இருக்கிறது. சபையாகிய நாம் கர்த்தருக்குப் பரிசுத்தமானவர்கள். நாம் அவருடைய ராஜ்யமாக இருக்கிறோம். நாம் அவருடைய ஜனங்களாக இருக்கிறோம், அவரில் ஒருவருக்கொருவர் ஐக்கியப்பட்டிருக்கிறோம். மேலும் கர்த்தர் தாமே நம் மூலம் செயல்படுகிறார்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.